# தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்

# ஆண்டறிக்கை
# 2012


தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்
எம்.டீ.எச். ஜயவர்தன வீதி
அத்துருகிரிய

தொலை பேசி : 011-2770232
தொலை நகல் :0114547644
மின்னஞ்சல் : nipm@sltnet.lk/nipd@sltnet.lk
வலை கடப்பிடம்: www.nipm.gov.lk

## உள்ளடக்கம்

*பக்கம்*

### நிருவாக அறிக்கை


| | |
|---|---|
| நோக்கும் பணியும் | 1 |
| தவிசாளரின் செய்தி | 2 |
| பணிப்பாளரின் செய்தி | 3 - 4 |
| குறிக்கோள்கள் | 5 - 6 |
| ஆளுநர்கள் சபைத் தாபனம் | 6 - 8 |
| ஆளுநர்கள் சபைக் கூட்டங்கள் | 8 - 9 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் | 9 |
| நிறுவனத்தின் கொள்வனவுக் குழு | 9 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் | 10 |
| நிறுவனத்தின் பதவியினர் | 10 - 12 |
| நிறுவனத்தின் நிறுவனசார் கட்டமைப்பு | 13 |
| பயிற்சிப் பிரிவு | 14 - 35 |
| நிருவாகப் பிரிவு | 35 - 37 |
| கணக்குப் பிரிவு | 37 - 39 |
| முன்னைய ஆண்டு முன்னேற்றம் | 39 - 41 |
| நிறுவனத்தினால் எதிர் கொள்ளப்பட்ட தடைகள் | 41 - 43 |
| முடிவுரை | 43 - 44 |

## நோக்கக்கூற்று

பயிற்சி அத்துடன் பெருந்தோட்ட முகாமைத்துவத்திற்கான அறிவுரையை வழங்குவதலும் அவதானிப்புகளை செயற்படுத்துவதிலும் சிறப்பான நிறுவகமாக செயற்படுதல்.

## **பணிக்கூற்று**

தரப்பயிற்சியினுள் பெருந்தோட்ட கைத்தொழிலின் சகல மனித வளங்கள் ஊடாக தொழில் தேர்ச்சியை பரிபூரண நிலைக்கு உயர்த்துதல்.

# தவிசாளரின் மீளாய்வு

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2012 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதிகளவு தேவைப்பட்ட சேவைகளை அடையாளங்கண்டு நாம் இவ்வாண்டின் போது இது வரை கருத்திற்கொள்ளப்பாடது விடப்பட்டிருந்த குழுவொன்றுக்கு எமது சேவைகளை வழங்குவதற்கு அதாவது: பிரதான பயிர்களில் 70% இற்கும் அதிகளவினைக் கொண்டுள்ள தேயிலை, இறப்பர், தெங்கு வெளிப் பயிர்ச் செய்கையாளர்களுக்காக எமது கற்கைநெறிகளை மாற்றினோம். நிகழ்ச்சிததிட்டங்களின் 75.5% ஆண்டு முழுவதும் இக்குழுவிற்காக நடாத்தப்பட்டன. கரும்பு மற்றும் மரமுந்திரிகை போன்ற ஏனைய பெருந்தோட்ட உற்பத்தியாளர்களுக்காகவும் நாம் சேவை வழங்கினோம்.

எமது பங்குதாரர்களுக்கு சிறந்த வசதிகளை வழங்குவதற்காக கணனி ஆய்வுகூடமொன்றினை நிறுவியமை இவ்வாண்டின் மற்றுமொரு முதன்மைச் செயற்பாடாகும். நாம் சேவை வழங்கிய எமது பங்குதாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு எமது பதவியினருக்கு வசதியளிப்பதற்காக உள்ளகப் பயிற்சியினையும் நாம் ஆரம்பித்தோம்.

உண்மையில் இவ்வாண்டில் நடாத்தப்பட்ட மொத்த நிகழ்ச்சித்திட்டங்களை 139.4 % இனால் அதிகரித்த அதேவேளை வெளிவாரி நிகழ்ச்சித்திட்டள்கள் ஊடாக ரூபா. 4.9 மில் செலவில் 8196 பேர் கொண்ட கொள்ளவொன்றினை விருத்தி செய்தோம்.

இருவட்டு ஒளிப்பேழை உபகரணங்களைப் அறிமுகப்படுத்துவதனூடாக கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி எதிர்வரும் ஆண்டுகளில் எமது சேவைகளை மேம்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். நிறுவனத்தினை மேலும் அழகுபடுத்தும் நோக்குடன் எமது வருமானத்தினைப் பயன்படுத்தி எமது வீதி வலைப்பின்னலை அபிவிருத்தி செய்தல் கட்டடங்களின் பகுதியொன்றினை புதுபித்தல்.

எமது 5 ஏக்கர் காணி இராணுவத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க விலைமதிப்பு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றின் அடிப்படையில் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றோம். கொடுப்பனவிற்கான எமது விண்ணப்பம் செயன்முறைப்படுத்தப்படுகின்றது.

எமது சேவைகளை தொடர்ந்து பயன்படுத்துகின்ற எமது பங்காளர்கள் மற்றும் எமது செயற்பாடுகளை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்வதற்கு பல்வேறு வழிகளிலும் எமக்கு ஆதரவளித்த அனைவருக்கும் எனது நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

முகாமைத்துவக் கடமைப் பொறுப்புக்களை இலகுபடுத்துவதற்கு கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுச் செயலர் திருமதி. சுதர்மா கருணாரத்ன, அமைச்சு மற்றும் ஏனைய அமைப்புக்களின் அனைத்து ஏனைய அலுவலர்கள், நிறுவனத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்களால் வழங்கப்பட்ட ஆதரவு, பணிப்புரை, வழிகாட்டல், உதவி பற்றி குறிப்பிடாவிடின் நான் தோல்வி கண்டிருப்பேன்.

இறுதியாக ஆண்டு முழுவதும் எமது அடைவுகளை சாத்தியமிக்கனவாக ஆக்கிய சிறப்பாக சேவையாற்றிய நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களாலும் ஆற்றப்பட்ட சேவைகளை பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

**ரஞ்சித் சமரசிங்க**
**தவிசாளர்**

# பணிப்பாளரின் செய்தி

2012 ஆம் ஆண்டு நிறுவனத்தின் பயிற்சி மற்றும் இணைந்த செயற்பாடுகளில் திருப்திகரமான அதிகரிப்பொன்றினைக் காண்பிக்கின்றது. 2011இல் 104 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. ஆனால் மீளாய்விற்குட்டபட்ட ஆண்டினபோது 249 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 139.4 % இனைக் காண்பிக்கின்றது. இவ் அதிகரிப்பானது வழங்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை, பயிற்சி நாட்களின் எண்ணிக்கை, ஈட்டப்பட்ட வருமானம் என்பவற்றுடன் மிகத் தெளிவாக காணப்படுகின்றது.

மீளாய்விற்குட்டபட்ட ஆண்டின் போது நிறுவனம் அதிக கவனம் செலுத்தி பயிற்சி மேற்கொண்ட புதிய பயிற்சித் துறைகள் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கரும்பு போன்ற பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களாக இருந்தன. இப் பெருந்தோட்டப் பயிர்களின் முடிவு உற்பத்தியின் பாரயளவிலான கூறு சிறு உடைமையாளர்களால் வழங்கப்பட்ட மூலப்பொருட்களிலிருந்து உற்பத்தியாகின்றன. எனவே, உற்பத்திகளின் தரத்தினை அதிகரிகரிப்பதற்கு சிறு உடைமையாளர்களால் வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கு சிறு உடைமையாளர்கள் பயிற்சி மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவையொன்றுள்ளது. இதனை ஆரம்பிப்தற்கு 2011 இல் ஈட்டிய நிதியிலிருந்து 1.79 மில் தொகையினை செலவிட்டு சிறு உடைமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இலவசமாக 74 நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவனம் நடாத்தியது. தேசிய பொருளாதாரத்தில் சிறு உடைமையாளர்களின் பங்களிப்பு பற்றி வற்புறுத்தியதன் பின்னர் 2012 இல் சிறு உடைமையாளர்களை பயிற்றுவிப்பதற்கு திறைசேரி ரூபா 5.0 மில் வழங்கியது. இத் தொகை 2013 இல் ரூபா 8.0 மில் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2012 இல் பயிற்றப்பட்ட மொத்த பங்குபற்றுனர்களில் (10331) 79.3% தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கரும்பு மற்றும் மரமுந்திரிகை போன்றவற்றை உள்ளடக்குகின்ற சிறு உடைமையாளர்கள் 79.9% ஆகவிருந்துடன் 14.7% சிறு உடைமை இறப்பர் மற்றும் கொழுந்து கொண்டு செல்பவர்களுக்கானதாகவிருந்தது. இது பெருந்தோட்ட நிறுவனத் துறையில் இணைந்துள்ள ஆளணியினரைப் பயிற்றுவிப்பதில் நிறுவனம் கணிசமான கவனம் எடுக்கவில்லை என்று பொருள்படாது. முன்னை ஆண்டில் அனுபவப்பட்டதைப் போன்று கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கேள்வி ஸ்திரமிக்கதாக காணப்பட்ட அதேவேளை திறன் அபிவிருத்தி, தொழிலாளர் அபிவிருத்தி போன்ற கல்விசாரா நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகரித்த போக்கினை காணக்கூடியதாகவிருந்தது. சிறு உடைமையாளர் தோட்ட தொழின்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட வேண்டுதலின் பேரில் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் சிறிய அளவிலான இறப்பர் தொழின்முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தியில் அறிவினை வழங்குவதற்காக நடாத்தப்பட்டன.

மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது நிறுவனம் எதிர்கொண்ட பிரதான தடை விடுதி முகாமையாளர், பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) போன்ற சில பதவிகளுக்கான வெற்றிடங்களளை நிரப்ப முடியாதிருந்ததாகும். இந்நிலைமைக்கான பிரதான காரணம் அத்தகைய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு திட்டத்தினால் வேண்டப்பட்ட உயர் தகைமைகளும் ஒப்பீட்டுளவில் வழங்கப்படும் குறைந்த சம்பளமும் ஆகும். வேறு சில தடைகள் ஒப்பீட்டளவில் குறைந்த விரிவுரைக் கட்டணம், வாகனங்கள் கிடைக்கப்பெறாமை மற்றும் நிறுவனத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்வதற்கு தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் கிழமை நாட்களில் கிரமமான அடிப்படையொனடறில் விடுவிக்கப்படாமை போன்ற காரணங்களினால் அனுபவம் பெற்ற வெளி வளவாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்வதில் தடைகள் காணப்பட்டதாகும். மறுமுனையில், சிறு உடைமையாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு பாரிய தேவை இருந்த போதிலும் அவர்கள் எதிர்கொண்ட நிதி தடைகள் அல்லது

அத்தகைய செலவுகளை மேற்கொள்வதற்கு ஏதேனும் ஏனைய மூலங்கள் கிடைக்கப்பெறாமையினால் பயிற்சிக்காக அவர்கள் பணம் செலுத்த முடியாதிருந்தது. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 26.459 மில் இதில் ரூபா 8.67 மில் கொரிய நிகழ்ச்சித்திட்ட பங்களிப்பாகும். ரூபா 3.8 மில். வருமானத்தினை ஈட்டி பொகவந்தலாவை பிராந்திய பயிற்சி நிலையம் முக்கிய பங்களிப்புச் செய்த அதேவேளை அதன் மொத்தச் செலவினம் ரூபா 2.04 மில் ஆக மாத்திம் இருந்தது. மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது மூலதனச் செலவினம் ரூபா 8.112 மில் மற்றும் மீண்டெலும் செலவினம் ரூபா 49.529 மில் ஆகவிருந்தது. தேய்மானத்திற்கு பின்னர் ரூபா 5.172 மில் தேறிய பற்றாக்குறையொன்று காணப்பட்டது. இந்நிலைமைக்கான காரணம் தேய்மான முறை மாற்றமும் சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலமும் ஆகும். 2011 இல் தேய்மானத் தொகை ரூபா 3.94 மில் ஆகவிருந்த அதே வேளை மீளாய்விற்குட்பட்ட ஆண்டின் போது இது ரூபா 9.72 மில் வரை அதிகரித்தது இருந்தபோதிலும் நிறுவனம் மீன்டெழும் செலவினத்திற்கு திறைசேரியினை 2011 இல் 25% சார்ந்திருந்ததை விட 21 % ஆக குறைக்க கூடியதாகவிருந்தது,

சபை மட்டத்திலும் பங்குதார்களுடனும் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிறுவனமானது துறையின் தற்போதய நிலைக்கு ஏற்றவாறு சரிசெய்வதற்கு அதன் செயற்பாடுகளை பன்முகப்படுத்த வேண்டிய தேவையினை உணர்ந்துள்ளது. அதற்கேற்ப, தொழிற்சாலை அலுவலர்கள், தோட்ட அலுவலர்கள், இயந்திரவியலாளர் மற்றும் நடுகைப் பயிலுநர்கள் போன்ற பயிலுநர்களுக்கான ஊக்குவித்தல் பாடநெறிகளில் அதிக கவனம் செலுத்தும் அதேவேளை சிறு உடைமையாளர்களை பயிற்றுவித்தலில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. எனினும், கேள்வி படிப்படியாயக அதிகரித்துச் செல்வதனால் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் தொடரப்படவேண்டியுள்ளது. மேலும், அதிக வருமானம் ஈட்டித்தருமென்பதனால் வெளிநாட்டு மாணவர்களுக்காக கிரமமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பீ. டுபிள்யூ. ஏ. கபிலவங்ச**
**பணிப்பாளர்**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

# தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்

## 31 திசம்பர் 2012 ல் முடிவடைந்த வருடத்திற்கான நிருவாக அறிக்கை

01. **குறிக்கோள்கள்:**

தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், 45ம் இலக்கம் கொண்ட பாராளுமன்ற சட்டத்தினால் 1979ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவகத்தின் பொதுக் குறிக்கோள்கள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்திலும் திருத்தப்பட்ட 1981 ம் ஆண்டின் 76ம் இலக்க சட்டத்திலும் 1987 ம் ஆண்டின் 05 ம் இலக்க மற்றும் 2003 ம் ஆண்டின் 38 ம் இலக்க சட்டத்திலும் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

அ.. பெருந்தோட்டத் துறையில் தொழில் புரிகின்ற சகல தரப்பினருக்கும் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பாக தேவைப்படும் பயிற்சிகளை தானே வழங்குதல் அல்லது இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் இணைந்து வழங்குதல்.

ஆ. பெருந்தோட்டத் துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு, பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முறையானதும், புத்துயிரானதும் மற்றும் செயலூக்கம் உடையதுமான பயிற்சி நெறிகளை வழங்குதல்.

இ. பெருந்தோட்டக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தனிப்பட்ட ஊழியர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் சிறப்புமிக்க பயிற்சி நெறிகளை பெற்றுக்கொடுத்தல்.

ஈ. தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கரும்பு முதலான பயிர் விளைச்சல் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய டிப்ளோமா பாடநெறியை வழங்குதல்

உ. பெருந்தோட்டக் கைத்தொழிலுடன் தொடர்புடைய கருத்தரங்குகள், தொழில் பட்டறைகள் மற்றும் மாநாடுகள் என்பவற்றுக்கு அனுசரனை வழங்குதல் மற்றும் நடாத்துதல்.

ஊ. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய நாளேடுகள் மற்றும் பருவ இதழ்களை வெளியிடுதல்.

எ. பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில் உறவு விடயங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல்.

ஏ. பெருந்தோட்டக் கைத்தொழிலில் முழுமையாக ஈடுபடுவதற்கு அடையாளம் காணப்பட்ட, பெருந்தோட்ட முகாமைத்துவம் சார்ந்த தேவையான உளத்திறனைக் கொண்டவர்களுக்கு பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் பயிற்சி நெறிகளை வழங்குதல்.

ஐ அரச திணைக்களங்கள், பொது கூட்டுத்தாபனங்கள் அல்லது பெருந்தோட்டக் கைத்தொழில் குறித்த இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களின் முகாமைத்துவ, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.

ஒ. வேறுபட்ட அங்கத்துவ தரங்களின் அனுமதிக்கான விண்ணப்பதாரிகளின் தகைமையினை பரிசீலனை செய்தல் மற்றும் நிறுவகத்தின் சகல அங்கத்துவ தரங்களுக்குமான தரப்பரீட்சையினை நடாத்துதல் அல்லது வழங்குதல்.

ஓ. தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் அதன் அங்கத்தவர்களின் பொது நடத்தைகளில் உயர்தர பராமரிப்பினை உறுதிப்படுத்துதல்.

ஔ பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் முதலீடுகளை அதிகரித்தல்.

க. பெருந்தோட்டங்கள் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகளின் தொகுப்புக்களை சேகரித்தலும் பரப்புதலும் மற்றும் பெருந்தோட்ட செயற்றிறனை உறுதிப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

கா. பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பொருத்தமான கொள்கைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் தொடர்புடைய ஏனைய பிரதிநிதிளுடன் ஒருங்கிணைத்தல்.

## 2.0ஆளுனர் சபையின் யாப்பு விதி

2.1 தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் 1979ம் ஆண்டின் 45ம் இலக்கம் கொண்ட சட்டத்தின் 06ம் பிரிவின் திருத்தப்பட்ட 1981ம் ஆண்டின் 76ம் இலக்க, 1987ம் ஆண்டின் 05ம்

இலக்க மற்றும் 2003ம் ஆண்டின் 38ம் இலக்க சட்டத்தின் படி குறித்த வருட காலப்பகுதியில் ஆளுனர் சபையின் கீழ்க்குறிப்பிடப்படும் அலுவலகப் பணியாளர்கள் பின்வருமாறு.

| பெயர் | அங்கத்துவத்தின் வகை | காலவரையறை |
|---|---|---|
| திரு.ரஞ்சித் சமரசிங்க<br>தவிசாளர் / தே.பெ.மு.நி | தவிசாளர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| கலாநிதி. டபில்யூ.எம்.ஜி.செனவிரத்ன<br>பணிப்பாளர் இஆநி | அங்கத்தவர் (பதவி வழி உத்தியோகத்தர்) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| கலாநிதி.ஐ.எஸ்.பீ.அபேசிங்க<br>பணிப்பாளர் /இ.ஆ.நி | அங்கத்தவர் (பதவி வழி உத்தியோகத்தர்) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| கலாநிதி. ஜயந்த குணதிலக<br>பணிப்பாளர் தெ.ஆ.நி | அங்கத்தவர் (பதவி வழி உத்தியோகத்தர்) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| கலாநிதி. டீ.வீ. சீவரட்ணம்<br>பிரதிநிதி/ இலங்கை பயிரிடுவோர் சங்கம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. அர்ஜுன் தெரணியகல பிரதிநிதி தெங்கு பயிர்ச்செய்கையாளர்களது சங்கம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு.என்.ஜீ. பியசேன<br>கணக்காளர் /பெ.கை.அ | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. ரஞ்சன் வல்பொல<br>பிரதிநிதி/ தனியார் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திருமதி. லோசினி பீரிஸ்<br>பணிப்பாளர் / வெளிநாட்டு வளத்திணைக்களம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. கே.ஜி.பி. ஒபேசேகர பொது முகாமையாளர் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. எஸ்.பீ. இதெல்ஆரச்சி<br>தவிசாளர் / துருசவிய நிதியம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. டபில்யூ.டீ. ஜயரத்ன கௌரவ.<br>செயலாளர் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்திச் சங்கம் | அங்கத்தவர்<br>(நியமனம் செய்யப்பட்டது) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. மலின் குணதிலக<br>செயலாளர் நாயகம்<br>இலங்கை பயிரிடுவோர் சங்கம் | கண்காணிப்பு உறுப்பினர். | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |
| திரு. சரத் சிறிசேன<br>பணிப்பாளர் /பிநிஅ<br>வ /ய லங்கா கொமடிட்டி புரோக்கர்ஸ் | கண்காணிப்பு உறுப்பினர். | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |

| | | |
|---|---|---|
| திரு. பீ.டபிள்யு. ஏ. கபிலவங்ஸ<br>பதில் பணிப்பாளர் / தே.பெ.மு.நி | அங்கத்தவர் (பதவி வழி உத்தியோகத்தர்) | ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை |

## 2.2 சபையின் செயலாளர்.

திரு.பி. டபி.ஏ கருணாரத்ன – (ஜனவரி தொடக்கம் திசம்பர் 2012 வரை)
உதவி. பணிப்பாளர் (நிருவாகம்)

## 2.3 ஆளுனர் சபைக் கூட்டம்

மீளாய்வாண்டில் ஆளுனர் சபையின் (10) கூட்டங்கள் அத்துருகிரிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டதோடு அவற்றுக்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

அ). மதிப்பீட்டை திருத்துதல்.

ஆ). நிலுவை பாடநெறிக்கட்டணம், அவற்றை அறவிடப்படும் முறை, மற்றும் நிலுவைக் கட்டணத்தை அறவிடடியாத விடத்து சாதாரண காரணங்களின் கீழ் அவற்றை பதிவழித்தல்.

இ). நிறுவனம், தொடர்பான பயிற்சி அளித்தல், நிர்வாக, நிதிப்பிரிவுகளுக்கு உரிய ஏனைய கொள்கை ரீதியான விடயங்கள்.

ஈ). ஊழியர்களுக்கான நீண்ட கால குறுங்கால உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி செயலமர்வும் புலமைபரிசும்.

உ). ஒவ்வொரு மாதங்களிலிலும் ஒவ்வொரு பிரிவுகளில் விடயங்களின் முன்னேற்றம்.

ஊ). கணக்காய்வு, முகாமைத்துவக்குழு ஊடாக விதப்புரை செய்யப்பட்ட விடயங்கள்

எ). வருடத்திற்குரிய கணக்காய்வு விசாரணைகளுக்கான நிறுவனத்தினால் தயார் செய்யப்பட்ட விளக்க அறிக்கை (previous year)

ஏ). புதிதாக ஆட்சேர்ப்பும் பதவியுயர்வும்.

ஐ). இற்றைப்படுத்தப்பட்ட இணைந்த திட்டமிடலும் செயற்பாட்டு திட்டமிடலும்.

ஒ). எதிர்வரும் வருடத்திற்கான வரவுசெலவு மதிப்பீடு

ஓ). எதிர்வரும் வருடத்திற்குரிய நிர்வாக அறிக்கையும் கணக்கறிக்கையும்.

க) கொள்வனவு நடவடிக்கைகள்

ங) கல்விசார் பாடநெறி மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபேறுகள்

ச) கற்றல் குழு அங்கத்தவர்கள்

ஞ) கொள்வனவு குழுக்களின் அங்கத்தவர்கள்

## 2.4 கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்கள்.

| | |
|---|---|
| திருமதி. லோசினி பீரிஸ்<br>பணிப்பாளர் / வெளிவளத்திணைக்களம் | தவிசாளர் |
| திரு. என்.ஜீ. பியசேன<br>கணக்காளர் /பெ.கை.அ | அங்கத்தவர் |
| திரு. பீ.டபிள்யு.ஏ. கபிலவங்ஸ<br>பணிப்பாளர் தே.பெ.மு.நி | அங்கத்தவர் |
| திரு. எல்.டீ.ஜே. பிரியந்த<br>கணக்காளர் / தே.பெ.மு.நி | குழு செயலாளர் |
| திருமதி. லலனி குணதிலக அரச<br>கணக்காய்வு அதிகாரசபை | கண்காணிப்பு உறுப்பினர். |
| திரு. டபில்யூ.ஏ.டீ.டீ.எம். பிரியந்த<br>உள்ளக கணக்காய்வாளர் பெ.கை.அ | கண்காணிப்பு உறுப்பினர். |

## 2.5.1 நிறுவக கொள்வனவுக் குழு அங்கத்தவர்கள் (பாரிய ஒப்பந்தங்கள்)

| | |
|---|---|
| திரு. ரஞ்சித் சமரசிங்க<br>தவிசாளர் / தே.பெ.மு.நி | தவிசாளர் |
| திரு. என்.ஜீ. பியசேன<br>கணக்காளர் /பெ.கை.அ<br>க | அங்கத்தவர் |
| திரு. பீ.டபிள்யு.ஏ. கபிலவங்ஸ<br>பணிப்பாளர் தே.பெ.மு.நி<br>ள | அங்கத்தவர் |

## 2.5.2 நிறுவக கொள்வனவுக் குழு அங்கத்தவர்கள் (சிறிய ஒப்பந்தங்கள்)

| | |
|---|---|
| திரு. பீ.டபிள்யு.ஏ. கபிலவங்ஸ<br>பணிப்பாளர் தே.பெ.மு.நி | தவிசாளர் |
| திரு. எல்.டீ.ஜே. பிரியந்த<br>கணக்காளர் / தே.பெ.மு.நி | அங்கத்தவர் |
| திருமதி. ஜே.எம்.டீ கருணாரத்ன<br>உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) | அங்கத்தவர் |

## 2.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

மேற்குறித்தன் பிரகாரம் இக்குழுவின் ஆளுனர் சபையின் இரு (02) அங்கத்தவர்களையும், (திரைசேறியின் பிரதிநிதிகள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதிகள்) நிறுவகத்தின் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோரைக் கொண்டுள்ளது.(தேபெமுநி) இதற்கு மேலதிகமாக அரசாங்க கணக்காய்வு அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பரிசோதகர் இக்கூட்டங்களில் அவதானிப்பு அங்கத்தவர்களாக பங்கேற்றனர். அவர்களது பங்கேற்றலானது தங்களின் முன் வைக்கப்பட்டுள்ள கருமங்களை ஆய்வு செய்வதற்கும் தீர்மானமெடுப்பதற்கும் குழுவிற்கு உதவியது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 8 கூட்டங்களுக்கு உதவியளிக்கப்பட்டதுடன் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன

அ) கணக்காய்வு விசாரணைகளுக்குரிய விடயங்களுக்கு பதிலளிப்பவர்கள்.

ஆ) மூலதனச்செலவு மற்றும் மீண்டெழும் செலவு தொடர்பான கொள்வனவு தீர்மானங்களை சிபாரிசு செய்தது.

இ) வரவுசெலவு மதிப்பீடு, கால முன்னேற்றம் மேலதிக நேரக் கொடுப்பனவு, எரிபொருள், தொலைபேசி, மின்சாரம் போக்குவரத்து போன்ற வசதிகளுக்கான செலவுகளை வரவுசெலவு மதிப்பீடு மற்றும் ஒப்பிடுதல்.

ஈ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவும் அவற்றின் வருமானமும்.

உ). நிர்வாகம் மற்றும் கணக்குப்பிரிவு தொடர்பான ஏனைய நிதிசார் செயற்பாடுகள்.

## 3.0 நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள்

| **3.1** .1 | **பதவி** | **இல.** |
|---|---|---|
| | தவிசாளர் | 01 |
| | பணிப்பாளர் | 01 |

### 3.1.2 பயிற்சிப் பிரிவின் உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| பயிற்சி நிபுணர்கள் (கணக்கியல், நிதி முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி நிபுணர்கள் (முகாமைத்துவம்) | 01 |
| பயிற்சி நிபுணர் (விவசாய. பொருளாதாரம்) | 01 |
| பயிற்சி உத்தியோகத்தர் (முகாமைத்துவம் | 01 |
| உயர்மட்ட அலுவலர் (பயிற்சி) | 01 |

| | |
|---|---|
| நூலகர் | 01 |
| எழுதுவினைஞர் - தரம் -I | 01 |
| சுருக்கெழுத்தாளர் -ஆங்கிலம்) தரம் 11 | 02 |
| எழுதுவினைஞர் கணனி இயக்குனர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள்(ஒப்பந்தம்) | **02** |
| அலுவலக உதவியாளர் | 01 |

**3.1.3 <u>நிர்வாகப் பிரிவின் உத்தியோகத்தர்கள்</u>**

| | |
|---|---|
| உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 |
| விடுதி முகாமையாளர | 01 |
| எழுதுவினைஞர் - தரம்-I | 01 |
| சுருக்கெழுத்தாளர் -ஆங்கிலம் தரம் 1 | 01 |
| தொழில் மேற்பார்வையாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள்(ஒப்பந்தம்) | 03 |
| சாரதி(ஒப்பந்த அடிப்படையில் ஒருவருடன்) | 05 |
| தோட்ட உதவியாளர்(ஒப்பந்த அடிப்படையில் 4 பேருடன்) | 04 |
| அலுவலக உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில் 3 பேருடன்) | **05** |
| சுகாதார உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) | **01** |

**3.1.4 <u>கணக்கியல் பிரிவின் உத்தியோகத்தர்கள்</u>**

| | |
|---|---|
| கணக்காளர் | 01 |
| எழுதுவினைஞர் - தரம்-I | 01 |
| களஞ்சிய பொறுப்பாளர் | 01 |
| கணக்குப் பதிபவர் | 01 |
| சுருக்கெழுத்தாளர் ஆங்கிலம் தரம் 1 | 01 |
| எழுதுவினைஞர் /தட்டெழுத்தாளர் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் **(ஒப்பந்தம்)** ` | 01 |
| அலுவலக உதவியாளர் (**ஒப்பந்தம்)** | 01 |

3.2. **<u>நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம்</u>**

| | |
|---|---|
| திரு. ரஞ்சித் குமார சமரசிங்க | - தவிசாளர் |
| திரு. பீ.டபிள்யு.ஏ. கபிலவங்ஸ | - பணிப்பாளர் |
| திரு. எல்.டீ.ஜே. பிரியந்த | - கணக்காளர் |

| | |
|---|---|
| திரு. ஜீ.எச். ஜயதிலக | - பயிற்சி நிபுணர் (கணக்கியல், நிதி முகாமைத்துவம்) |
| திருமதி. ஏஸ்.என். இலங்கதிலக | - பயிற்சி நிபுணர் (விவசாயம். பொருளாதாரம்) |
| திருமதி.ஆர்.என். லொகுஹெட்டி | - பயிற்சி நிபுணர் (முகாமைத்துவம்) |
| திருமதி. ஜே.எம்.டீ. கருணாரத்ன | - உதவி பணிப்பாளர் (நிர்வாகம்) |

நிறுவனத்தின் பணிமனைக்கான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் 2010.09.06 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு ஆட்சேர்ப்பு முறைமைக்காக 2011.02.23 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டது. இவ் அனுமதிகளுக்கமைய கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலிருந்த கணக்காளர் பதவி அவரது பொறுப்புக்கள் மற்றும் செயலாற்றப்பட்ட கடமையின் முக்கியத்துவம் என்பவற்றினை கருத்திற் கொண்டு நடுத்தர முகாமைத்துவமாக தரமுயர்த்தப்பட்டது. மேலும் பதவியினர் உதவியாளர் (பயிற்சி) அது வேண்டப்படாமையினால் ஒதுக்கப்பட்டது. மறுமுனையில் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலிருந்த ஓடியோ விசுவல் அலுவலர் பதவி நடுத்தர முகாமைத்துவ பதவியொன்றுக்கு தேவையான தகைமைகளுடன் ஒப்பிடும்போது இப்பதவிக்கான தகைமைகள் ஒப்பிட முடியாத படியினால் முகாமைத்துவ உதவியாளர் வகைக்கு தரங்குறைக்கப்பட்டது.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

**நிறுவனசார் கட்டமைப்பு**




*நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

TS- பயிற்சி நிபுணர்
TO- பயிற்சி அலுவலர்
M A – முகாமைத்துவ உதவியாளர்
A & FM- கணக்கீடும் நிதியியல் முகாமைத்துவமும்
Mgt- முகாமைத்துவம்
AVA-இருவட்டுஒளிப்பேழை உதவியாளர்
Tech- தொழிநுட்ப
AE- விவசாயப் பொருளியல்

## 4.0 பயிற்சிப் பிரிவு

தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் 1979ம் ஆண்டின் 45 ம் இலக்கம் கொண்ட சட்டம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் முக்கிய குறிக்கோள், சிறுநில உடைமையாளர்கள் உள்ளடங்கிய பெருந்தோட்டத் துறைக்கு ஈர்த்துக்கொள்ளப்பட்ட சகல ஆளனி பிரிவினருக்கும் கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதலாகும். இந்நிறுவனமானது இக்குறிக்கோளை அடைந்துக் கொள்வதற்கு முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஏற்ப அவை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முக்கிய 07 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

### அ) நடைபெறும் கல்வி சார்ந்த பயிற்சி நெறிகள்

- வயம்ப பல்கலைகழகத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட பெருந்தோட்ட முகாமைத்தும் பற்றிய பட்டப்படிப்பு.
- பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா
- பெருந்தோட்டக் கணக்கீடு மற்றும் நிதிமுகாமைத்துவத்தில் சான்றிதழ் பாடநெறி
- கணக்குப்பதிவு மற்றும் பெருந்தோட்டக் கணக்கீட்டில் சான்றிதழ் பாடநெறி
- மனிதவள முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி
- ஆங்கில வணிகமொழிக்கல்வி சான்றிதழ் பாடநெறி
- தமிழ் மொழிக்கல்வி சான்றிதழ் பாடநெறி
- பயிற்சி பெறும் தேயிலை தொழிற்சாலை அலுவலர்களது அறிமுக பாடநெறி
- தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை முகாமைத்துவ தேசிய சான்றிதழ் பாடநெறி
- தேயிலை பயிர்ச்செய்கை மற்றுமு தேயிலை உற்பத்தி பற்றிய தேசிய சான்றிதழ் பாடநெறி
- இறப்பர் பயிர்ச்செய்கை மற்றுமு இறப்பர் உற்பத்தி பற்றிய தேசிய சான்றிதழ் பாடநெறி
- பயற்சிபெறும் பெருந்தோட்ட அலுவலர்களது அறிமுகப்பாடநெறி
- பயற்சிபெறும் பெருந்தோட்ட அலுவலர்களது உயர் பயிற்சிப் பாடநெறி

### ஆ) தொழில்சார் பாடநெறிகளை நடாத்துதல்

- தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலைப் பயிற்சி
- இறப்பர் உற்பத்தி மற்றும் தொழிற்சாலைப் பயிற்சி
- தெங்கு உற்பத்தி நடைமுறை பயிற்சி
- மொழித்தேர்ச்சிப் பரீட்சை
- தேயிலை பயிர்ச்செய்கை பற்றிய தொழில்சார்
- பயிர்ச்செய்கை பற்றிய தொழில்சார்

இ) **மேற்கொள்ளப்படும் திறனபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

- பல்வேறுவகையான தொழிற் பட்டறைகள், கருத்தரங்கு மற்றும் ஏனையவை
- செயற்றிறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- சிறு உடமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

ஈ) பெருந்தோட்ட முகாமை பற்றிய கண்காணிப்பு வெளியீடுகளை மேற்கொள்ளுதல். (பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் நாளேடுகள், செய்திப்பத்திரிகை, பயிற்சித் திட்டங்களின் மாணவர் கையேடு, அச்சுப் பத்தகங்கள் மற்றும் ஏனைய பருவ வெளியீடுகள்)

உ) பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல். அரச மற்றும் மற்றும் தணியார் நிறுவனங்களுக்கு தொழிலாளர்களை தெரிவு செய்தல் மற்றும் பதவி உயர்த்துவதற்கான உளத்திறன் சோதனை மற்றும் பரீட்சைகளை (வாய்மொழிமூலம் மற்றும் எழுத்து மூலம்) நடாத்துதல்.

ஊ) நிறுவகத்தின் தொழில்சார் அங்கத்தவர்கள் பொருத்தமான பெருந்தோட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்தல்.(கௌரவ அங்கத்தவர், இணை அங்கத்தவர், குழு அங்கத்தவர் மற்றும் மாணவ அங்கத்தவர்)

எ) அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களுடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை நடாத்துவதற்கு நிறுவன வசதிவாயப்புக்களை வழங்குதல். ( உணவு, தங்குமிட வசதி, விரிவுரை மண்டபம் மற்றும் ஏனையவை..)

## 4.1 2012 ஆண்டின் போதான பயிற்சிச் செயற்பாடுகள்

2012ன் போது நிறுவனம் அடிப்படையில் இரண்டு வகையான நிகழ்ச்சித்திட்டங்களை அதாவது பெருந்தோட்டத்துறைக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. பெருந்தோட்டத் துறையானது பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளினால் மற்றும் பெருந்தோட்டத்துடன் தொடர்புடைய இறப்பர் அபிவிருத்தி திணைக்களம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தேயிலைச் சபை, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை, சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேயிலை சக்தி நிதியம் போன்ற நிறுவனங்களினால்

முகாமை செய்யப்படும் பெருந்தோட்டங்கள் என வரையறை செய்யப்படுகின்றது. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் 2012ம் ஆண்டிற்கான கற்கை விபரக் குறிப்புக்களை உள்ளடக்கியிருந்ததுடன் நடாத்தப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித் திட்டங்களின் வகை | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிககை | நிகழ்ச்சித் திட்டங்களின் கால வரையறை | பங்கு பற்றுனரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1.பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் **B. Sc** பட்டம் | 01 | 03 வருடங்கள் | 47 |
| 2.பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா பாநெறி | 01 | 18 மாதங்கள் | 16 |
| 3. பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா | 02 | 18 மாதங்கள் | 36 |
| 4.தேயிலை உற்பத்தி மற்றும் தொழிற்சாலை பயிற்சியில் தொழில்சார் பாடநெறி | 02 | 07 | 50 |
| 5. பெருந்தோட்ட கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவத்தில் சான்றிதழ் பாடநெறி | 02 | 12 மாதங்கள் | 60 |
| 6. கணக்குப் பதிவு மற்றும் பெருந்தோட்டக் கணக்கீட்டில் சான்றிதழ் பாடநெறி | 02 | 12 மாதங்கள் | 33 |
| 7. சிலாப பெருந்தோட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 01 | 02 நாட்கள் | 60 |
| 8. தெ.ஆ. நிறுவனத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்களா | 01 | 02 நாட்கள் | 27 |
| 9. .இறப்பர் வெளிக்கள உத்தியோகத்தருக்கான செயற்றிறன் அபிவிருத்தி செயலமர்வு | 01 | 05 நாட்கள் | 15 |
| 10 தேயிலை தொழிற்சாலை அலுவலருக்கான செயற்றிறன் அபிவிருத்தி செயலமர்வு | 02 | 05 நாட்கள் | 68 |
| 11. பயிற்சி பெறும் தோட்ட அதிகாரிகளுக்கான அறிமுகப் பாடநெறி | 02 | 06 மாதங்கள் | 59 |
| 12. தேயிலைக் கொழுந்து போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 19 | 02 நாட்கள் | 943 |
| 13. எஸ்பீஈஎன் டீபி நிகழ்ச்சித்திட்டங்கள் | 18 | 02 நாட்கள் | 574 |
| 14. வியாபார ஆங்கிலம் | 02 | 10 மாதங்கள் | 26 |
| 15. இறப்பர் உற்பத்தி மற்றும் தொழிற்சாலை பயிற்சியில் தொழில்சார் பாடநெறி | 01 | 05 நாட்கள் | 16 |
| 16. ஒயில் பாம் பயிர்ச்செய்கை | 01 | 02 நாட்கள் | 30 |
| 17. இஅஅதிகாரசபைக்கான நிகழ்ச்சித்திட்டம். | 03 | 05 நாட்கள் | 107 |
| 18. தேயிலை சக்தி நிதியத்துக்கான நிகழ்ச்சித்திட்டம். | 01 | 01 நாள் | 15 |
| மொத்தம் | ***61**** | ***678*** | ***2135*** |

* பட்டப்படிப்பு தவிர்ந்த

**4.2** 2012ல் எதிர்பார்க்கப்பட்ட மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீடொன்று கீழெ தரப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்ட விபரக் குறிப்பில் குறிப்பிட்டவாறு 2012ம் ஆண்டிற்காக நிறுவனம் 68 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் 2038 ஆட்களைப் பயிற்றுவிப்பதற்கும் முன்மொழிந்த அதே வேளை ரூபா 15.86 மில். தொகையினை இப்பயிற்சி செயற்பாடுகளிலிருந்து உழைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் நிறுவனமானது 61 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கும் 2135 ஆளணியினரை பயிற்றுவிப்பதற்கும் கூடியதாக இருந்த அதே வேளை ரூபா 12.85 மில். தொகையினை உழைத்தது. நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய எண்ணிக்கையில் ஆண்டின்போதான உண்மைச் செயலாற்றுகை இலக்கிற்கு எதிராக 74.7 % ஆகவும் பயறிறப்பட்ட ஆளணியினர் 98% ஆகவும் காணப்பட்டது. இலக்கிற்கு எதிராக ஈட்டப்பட்ட வருமானம் 78.3% ஆகக் காணப்பட்டது. ஈமற்குறித்த கணிப்பில் வயம்ப பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான மானி கற்கைநெறி கருத்திற் கொள்ளப்படவில்லை. ஏனெனில் அது இணைந்த முயற்சியொன்றாக இருந்தது.

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2012 – திட்டமிடப்பட்டதும் உண்மையானதும்.**

| நிகழ்ச்சித்திட்டங்கயின் எண்ணிக்கை | திட்டமிடப்பட்டது | | | உண்மையானது | | | முன்னேறங்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மாணவர் களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மில்) | நிகழ்ச் சித்திட் டங்களின் எண்ணிக்கை | மாணவர் களின் எண்ணிக்கை | வருமானம் (ரூபா மில்) | நிகழ்ச் சித்தி ட்டங் களின் எண் ணிக் கை | மாணவர்களின் எண்ணிக் கை | வருமானம் (ரூபா மில்) |
| கல்வி சார் மற்றும் தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் | 15 | 328 | 8.18 | 12 | 237 | 4.`1 | 80% | 72% | 51% |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 5 | 95 | 1.22 | 5 | 140 | 1.0 | 100% | 147% | 80% |
| தொழிலாளர் அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | 22 | 700 | 1.34 | 18 | 574 | 0.68 | 81% | 82% | 51% |
| நடுகைப் பயிலுனர்களுக்கான ஊக்குவித்தல் கற்கை நெறி | 3 | 40 | 2.5 | 2 | 59 | 3.5 | 67% | 147% | 140% |
| விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 20 | 800 | 2.4 | 24 | 1125 | 3.57 | 120% | 140% | 148% |
| முகாமைத்துவ மற்றும் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 4 | 75 | 0.22 | - | - | - | 0% | 0% | 0% |
| **மொத்தம்** | **69** | **2038** | **15.86** | **61** | **2135** | **12.85** | **74.7 %** | **98%** | **78.3%** |

சிறு உடைமையாளர் நிகழ்ச்சித்திட்டங் களிலிருந்தான வருமானம் அவை திறைசேரியினால் அளிக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இலவசமாக நடாத்தப்பட்டதனால் உள்ளடக்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாமக முகாமைத்துவ மற்றும் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கேள்வி போதாமையாக இருந்ததுடன் எமது செயலாற்றுகை இலக்குகளுக்கு கீழ் காணப்பட்டது.

### 4.3 சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

பொதுத் தொழில் முயற்சிகள் மீதான குழு அதன் 2011.04.08 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நாட்டில் சுமார் 75% பெருந்தோட்ட விளைச்சலுக்கு பங்களிப்புச் செய்கின்ற சிறு உடைமையாளர்களுக்கான சில நிகழ்ச்சித்திட்டங்களை ஏன் முகாமைத்துவம் நடாத்தவில்லை என்று தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் தொழிற்பாடுகள் பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி கலந்துரையாடியது. செலவு செய்வதற்காக தடையாக இருந்த நிதியியல் பிரச்சினைகளின் காரணமாக நிறுவனம் சிறு உடைமையாளர்களுக்கான ஏதேனும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தவில்லை. தரமிக்க உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு அவர்களது அறிவினையும் திறன்களையும் வலுவூட்டுவதற்கு அவர்களுக்கு பயிற்சி தேவையென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொது தொழில் முயற்சிகள் மீதான குழுவினால் எழுப்பப்பட்ட கருத்தினடிப்படையில் நிறுவனமானது ரூபா 1.7 மில். ஈட்டப்பட்ட அதன் வருமானத்தைப் பயன்படுத்தி சிறு உடைமையாளர்களுக்காக 2011ல் 74 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

ஈட்டிய வருமானத்தைக் கொண்டும் சிறு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மீது வலியுறுத்தப்பட்ட மகிந்த சிந்தனைக்கமைவாகவும் அத்துடன் பெருந்தோட்ட பயிர் உற்பத்தியில் சிறு உடைமையாளர்களின் பங்கின் முக்கியத்துவத்தினை அடையாளப்படுத்தி பாராட்டும் முகமாக திறைசேரி 2012ல் சிறு உடைமையாளர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 5 மில்லியன் தொகையினை அளித்தது.

இது சிறு உடைமையாளர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திறைசேரியினால் நிறுவனத்துக்கு நிதியளிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

சிறு உடைமையாளர்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் கொள்ளளவு கட்டடியெழுப்பல் என்பதன்கீழ் கருத்திற் கொள்ளப்பட்டு செலவினம் மூலதனச் செலவினத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. பின்வரும் அட்டவணை மீளாய்வு ஆண்டின்போது உண்மையாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கெதிராக சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கைக்கிடையிலான ஒப்பீடு ஒன்றினைக் காட்டுகின்றது.

**சிறு உடைமையாளர்களுக்கான கொள்ளளவு விருத்தியாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2012**

| **நிகழ்ச்சித்திட்டத்தின் வகை** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றுனர் எண்ணிக்கை** | **செலவு (ரூபா மில்.)** |
|---|---|---|---|
| இறப்பர் சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 60 | 3,069 | 1.87 |
| தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 62 | 2,387 | 1.02 |
| தெங்கு சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 54 | 2,288 | 1.37 |
| மரமுந்திரிகை சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | 160 | 0.09 |
| கரும்பு சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 7 | 279 | 0.14 |
| பயிலுனர் தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 13 | 0.42 |
| **அடையப்பெற்ற மொத்தம்** | **188** | **8196** | **4.865** |
| **திட்டமிடப்பட்ட மொத்தம்** | **70** | **2800** | **5.00** |

அரசாங்க அளிப்பு ரூபா 5 மில். இனைப் பயன்படுத்தி சிறு உடைமையாளர்களுக்காக 70 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் நாம் 188 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி 268.6% முன்னேற்றத்தினைக் காட்டினோம். நிதி ஒதுக்கீடு அதிகரிப்பின்றி எவ்வாறு அத்தகைய முன்னேற்றத்தினை அடையப் பெறக் கூடியதாக இருந்தது என்ற கேள்வி எழுப்பப்படலாம். நிகழ்ச்சித்திட்டமொன்றுக்கான செலவு திட்டமிடப்படுகையில் இது சாத்தியமாக்கப்பட்டது. சிறு உடைமையாளர் ஒருவருக்கு ஒரு நாள் வருமான இழப்பிற்காக பங்குபற்றுனர் ஒருவருக்டகு ரூபா 1000 நட்டஈடு வழங்குவதற்கும் அவர்களை நிகழ்ச்சித்திட்டத்திற்கு பிரசன்னமாகியிருப்பதற்கு உரித்துப்பெறச்செய்வதற்குமான தொகை ஒன்றாக கூறொன்று ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய பயிற்சி அறிவு ரிதியாகவும் தகைமை ரீதியாக அதாவது உற்பத்தித் திறனை அதிகரிக்கின்ற இரண்டிலும் தனிப்பட்ட அதிகரிப்பினை விளைவிக்கக் கூடியதுடன் பயிற்சி பீட அங்கத்தவர்கள் அத்துடன் வெளிவாரி வள ஆளணியினர் இக்கொடுப்பனவுக்கெதிரான தங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டனர். அதாவது இதையொத்த துறையில் இலவச நிகழ்ச்சித்திட்டங்களில் முன்னுரிமையினையும் ஏனையவற்றினையும் தோற்றுவிக்கும் என்பதினால் ஆகும். எனவே நிறுவனம் ஒவ்வொரு பங்குபற்றுனருக்கும் கொடுப்பனவொன்றினை செலுத்தாது இந் நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்த தீர்மானித்ததுடன் இதனூடாக பயன்படுத்தப்பட்ட கிடைக்கத்தக்க நிதி 70 இலிருந்து 188 நிகழ்ச்சித்திட்டங்களாக அதிகரித்தது.

அனைத்து இந்நிகழ்ச்சித்திட்டங்களும் தேயிலை, இறப்பர், தெங்கு, மரமுந்திரிகை மற்றும் கரும்பு துறைகளில் பிராந்தியங்களில் நடாத்தப்பட்டது. இம்முறையியல் கொள்கைசார் விரிவுரைகளை விட

செயற்பாடு அமர்வுகளுக்கான அதிகரித்த நேரத்தினை வழங்கியது. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் காலம் 5 மணித்தியாலங்களாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சிறு உடைமையாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதற்கும் இடத்தில் தங்கியிருப்பதற்கும் பங்குபற்றுனர்களுக்கு காலைத் தேனீர் மற்றும் சிற்றுண்டிகள் மற்றும் மதிய உணவு, சிற்றுண்டிகளுடன் மாலைத் தேனீர் என்பன வழங்கப்பட்டது. நடாத்தப்பட்ட முறைசாரா நிகழ்ச்சித்திட்டங்களைக் கற்பதற்கு சிறு உடைமையாளர்கள் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் பற்றி தமது வரவேற்பினை வெளிப்படுத்தியதை ஏற்றுக் கொண்டு பதழவு செய்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

மேற்குறித்த விபரங்கள் சாரம்சப் படுத்தப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

## சாரம்ச தகவல்கள்

| | **2011** | **2012** | **மாற்றத்தின் விகிதாசாரம்** |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்கள் எண்ணிக்கை | 104 | 249 | 239.4% |
| பயிற்சிபெற்றோரது எண்ணிக்கை | 4268 | 10331 | 242.1% |
| சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் | 74 | 188 | 254.1% |
| பயிற்றப்பட்ட சிறு உடைமையாளர்களின் எண்ணிக்கை | 3292 | 8196 | 249.0% |
| பயிற்சி நாட்கள் | 884 | 1020 | 115.4% |
| பெற்றுக்கொண்ட வருமானம் | ரூ. 36.79 மில். | ரூ. 44.357 மில். | 120.5% |
| சிறு தோட்ட உரிமையாளர்களை பயிற்றுவிப்பதற்க செலவான தொகை | ரூ. 1.79 | ரூ. 4.865 மில். | 271.8% |
| பணிமனை தேபெமு | 05 | 05 | 0% |
| ஒருவர் பங்குகெறுவதற்கான கிடைக்கும் வருமானம் | ரூ. 554,000 | ரூ. 575,000 | 103.8% |
| சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான செலவு | ரூ. 543 | ரூ. 593 | 109.2% |

## பயிற்றப்பட்ட பங்குபற்றுனர்களின் வகை - 2012

| | |
|---|---|
| தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் | 247 |
| கள உத்தியோகத்தர்கள் | 179 |
| தொழிற்சாலைப் பதவியினர் | 68 |
| எழுதுனர் | 124 |
| சிறு உடைமையாளர், இறப்பர் தொழில் முயற்சியாளர் மற்றும் தேயிலைக் கொழுந்து கொண்டு செல்பவர்கள் | 1517 |
| சிறு உடைமையாளர்கள் | 8196 |






## நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வகை - 2012

| | |
|---|---|
| பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் | **11** |
| கள உத்தியோகத்தர்கள் | **6** |
| தொழிற்சாலைப் பதவியினர் | **2** |
| எழுதுவினைஞர்கள் | **5** |
| சிறு உடைமையாளர் இறப்பர் தொழில்முயற்சியாளர்கள், கொழுந்து கொண்டு செல்வோர் | **37** |
| சிறு உடைமையாளர்கள் | **188** |
| மொத்தம் | **249** |

## 4.4 பயிலுனர் தேயிலைத் தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டம்

சிறு உடைமையாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மத்தியில் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாக பயிலுனர் தேயிலை தொழிற்சாலைகளுக்கான நிகழ்ச்சித்திட்டம் கொழுந்தினை உற்பத்தி செய்வதற்கும் அவர்களுக்கு வழங்குவதற்கும் சிறு உடைமையாளர்களுக்கு உதவியளிக்கும் நோக்குடன் நடாத்தப்பட்டது. தற்போது விசேடமாக கொண்டுவரப்பட்ட தேயிலைக் கொழுந்து தொழிற்சாலைகளில் பயிற்றப்பட்ட தேயிலைத் தொழிற்சாலை அலுவலர்களுக்கு மோசமான பற்றாக்குறையொன்று காணப்படுகின்றது. அத்தகைய தொழிற்சதலைகள் முறைமை சார்ந்த ஆட்சேர்பபு முறைமைஅயொன்றினை பிரயோகிப்பதில்லை. தற்போது காணப்படுகின்ற தேயிலைத் தொழிற்சாலை பதவியினரில் பெரும்பாலானோர் போதிய செயற்பாட்டு அனுபவம் உள்ளது. ஆனால் அவர்களது கொள்கைசார்/ அல்லது விஞ்ஞான அறிவு மிகக் குறைவானதாகும். இது சிறு உடைமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படும் வருவாய் மீது இறுதியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற இறுதி உற்பத்தி, அதன் தரம் மற்றும் விலைகளில் நேரடித் தாக்கத்தழினைக்க கொண்டுள்ளது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு நிறுவனம் க.பொ.த. உயர்தர தகைமைகளுடன் பாடசாலை விட்டு விலகிய 49 பேரினை தொரிவு செய்து பயிலுனர் தேயிலை தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்தது. இது 7 மாத முழுநேர நிகழ்ச்சித்திட்டமாவதுடன் தொழிற்சாலை ஒன்றில் 3 மாத உள்ளக பயிற்சி ( தொழிற்சாலை பற்'றித் தெரிந்து கொள்ளல் நிகழ்ச்சித்திட்டம்) இனையும் தேயிலை தயாரிப்பு, சந'தைப'படுத்தல், தேயிலை வியாபார விற்பனை நடைமுறைகள், தேயிலை சுவைப் பரிசோதனை மற்றும் தொழிற்சாலை பாதுகாப்பு சுகாதாரம் போன்ற விடயங்களை உள்ளடக்கிய விதிமுறை மற்றும் செயன்முறை ஊடான இரண்டினையும் கொண்ட கொள்கை சார் 1 மாத பயிற்சி மற்றும் தெரிவு செய்யப்பட்ட சிறப்பாக முகாமை செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளில் 3 மாத செயன்முறைப் பயிற்சி என்பவற்றினையும் உள்ளடக்குகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டம் 49 மாணவர்களுடன் ஆரம்பித்திருந்த போதிலும் 2 மாணவிகள் உட்பட 13 பேருடன் முடிவுற்றது. மிகுதி மாணவர்கள் இடைவிலகிச் சென்றனர். எவ்வாறாயினும் எஞ்சியிருந்தோர் நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்து

உதவித் தேயிலைத் தொழிற்சாலை அலுவலர்களாக கொண்டுவரப்பட்ட தேயிலைக் கொழுந்து தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களினால் தொழிலுக்கமர்த்தப்பட்டனர்.

எமது செயலாற்றுகையினை பராட்டும் அடையாளமொன்றாகவும் பெருந்தோட்டத்துறையில் சிறு உடைமையாளர்களை விருத்தியாக்குவதற்கான தேவையினை ஏற்றுக் கொண்டு திறைசேரி 2013ம் ஆண்டில் சிறு உடைமையாளர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 8 மில். தொகையினை ஒதுக்கீடு செய்துள்ளது. அதற்கமைய நிறுவனம் பனை போன்ற பயிர்களையும் உள்ளடக்கி கிழக்கு மற்றும் வடக்கு பிரதேசங்களில் சிறு உடைமையாளர் நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

### 4.5 பயிற்சி முறையியல்

கு

ல்வி சார் கற்கை நெறிகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் கற்பதற்கான முறையியல் நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்த மாறுபாடுகளை கருத்திற் கொண்டு தரப்படுத்தப்பட்டுள்ளது. நேரசூசி, ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்துக்குமான காலம், அத்துடன் பங்குபற்றுனர், அவர்களின் பதவி, பணியாற்றுமிடம் மற்றும் வழங்கப்பட்ட கடமை விடுமுறை போன்ற கருமங்களை தீர்மானித்தல் கருத்திற் கொள்ளப்பட்டன. தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கு வடிவமைக்கப்பட்ட நீண்டகால கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், பாடக்குறிப்பு அலகு அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் பல அலகுகள் கூறுகளாகப் பிரிக்கப்படடிருந்ததுடன் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட அடிப்படையில் நடாத்தப்பட்டன. விரிவுரை/செயன்முறை வகுப்புகளுக்கு திகதி குறிக்கையில் தோட்டங்களில் பங்குபற்றுனர் பிரசன்னமாகியஜருக்க வேண்டிய திகதிகள் தவிர்க்கப்பட்டன. பொதுவாக நீண்டகால கற்கை நெறிகளுக்கான விரிவுரை வகுப்புகள் தொடரச்சியான அடிப்படையில் ஒன்றிலன்றி மாதமொன்றுக்கு 6 நாட்கள் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அநேகமாக வெள்ளிக்கிழமை உட்பட முதலாம் மற்றும் மூன்றாம், வார இறுதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தன. இவ்வணுகுமுறையின் பிரதான குறிக்கோள் தோட்டங்களின் அவர்களின் பிரசன்னமின்மையின் தாக்கத்தினை குறைப்பதாகவிருந்தது. இருந்தபோதிலும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பரீட்சைகள் போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் 5-7 வரையான தொடர்ச்சியான திகதிகளில் நடாத்த்பபட்டது. ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்ட விடயத்தில் காலம் ஒரு நாளாக ( சுமார் 5-6 மணித்தியாலங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவை தொடர்புடைய பிரதேசத்தில்/பிராந்தியங்களில் நடாத்தப்பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தும்போது நிறுவனம் குழுக்கலந்துரையாடல், குழுப்பயிற்சி, செய்துகாட்டல்கள், விடய ஆய்வுகள், கள விஜயங்கள் மற்றும் அனுபவப் பரிமாற்றம் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற நவீன முன்னேற்றமடைந்த பயிற்சி முறையியல்களை பயன்படுத்துகின்றது.

தோட்ட மற்றும் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களில் அதிக செயன்முறை வகுப்புக்கள் பிரயோகிக்கப்படும் அதேவேளை கல்வி சார் கற்கை நெறிகளில் விரிவுரைப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. சிறு உடைமையாளர்க மற்றும் தொழிலாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களின் காலத்தின் 80 % இற்கு மேல் செயன்முறை வகுப்புகளுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றது. அத்தகைய முறையியலை பிரயோகிப்பதனூடாக அவர்கள் வாசிப்பதற்கோ, கவனமீர்ப்பதற்கொ, செவிமடுப்பதற்கோ அல்லது எழுதுவதற்கோ விருப்பமின்மையால் ஒவ்வொரு வகுப்பிலும் பயிற்சிச் செயற்பாடுகள் மீது செயற்றிறனுடன் கவனம் செலுத்துவதற்கு பங்குபற்றுனர்களை ஊக்குவிக்கக்கூடியதாக இருந்தது.

தோட்ட நிறைவேற்று அலுவலர்களுக்கான முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் ஆற்றப்படும் பங்கு, விடய ஆய்வு, முகாமைத்துவ தொழில் மற்றும் குழுவாக பிரச்சினைக்குத் தீர்வு காணல் போன்றவை மீது அதிக கவனம் ஈர்க்கப்பட்டது.

கடந்த வருடங்களில் அனுபவப்பட்டதைப் போன்று நிறுவனம் அதிகமாக வருகைதரு ஆளணியினரில் தங்கியிருந்ததுடன் அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்குவதற்கு பயிற்சி ஆளணியின் போதிய எண்ணிக்கையினை ஆட்சேர்ப்புச் செய்வதும் வேதனாதி செலிவினை சமாளிப்பதும் கஷ்டமாக இருந்ததினால் இது நீடித்து உழைக்கத்தக்க மாற்றுவழி ஒன்றாக கருதப்பட்டது. மீளாய்வு ஆண்டின்போது நிரந்தர பதவி அணியில் 4 வள ஆளணியினரை மாத்திரம் நிறுவனம் பெற்றிருந்தது. நிறுவனமானது தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு ஆராய்ச்சி நிறுவனங்களிடமிருந்து வெளிவாரி வள ஆளணியினரின் சேவையைப் பெறுவதற்கும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் அத்துடன் தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்களில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்றவர்களிடமிருந்தும் சேவையினைப் பெற நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கல்வி கற்கை நெறிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வள ஆளணியினரைத் தெரிவு செய்கையில் அவர்களது கல்விசார் பின்னணி, துறையில் அனுபவம் கற்பித்தல்/பயிற்றுவித்தல் இயலுமை கவனத்திற் கொள்ளப்பட்டது.

### 4.6 பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞான மானிப் பட்டம்

சிறு உடைமையாளர்கள் உள்ளடங்கலாக பெருந்தோட்ட துறையில் இணைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்ட அலுவலர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட முகாமைத்துவ மற்றும் தொழினுட்ப அபிவிருத்திக்கான புதிய பரிமாணம் ஒன்றினை வழங்குவதற்கான பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் விஞ்ஞான மானிப் பட்டம்.

2006 வரை பெருந்தோட்ட ஆளணியினருக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகள் இருக்கவில்லை. டிப்ளோமா மட்டத்தினை விட உயர்ந்த மட்டம் ஒன்றில் உயர் தகைமை, முகாமைத்துவ திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில்சார் பண்புகளை அடைந்து கொள்வதற்கு இத்துறையிலுள்ள தனிப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை கண்டறிவதற்கு பெருந்தோட்ட துறையில் தேவையொன்று காணப்பட்டது. இம்மட்டத்தில் பெருந்தோட்ட துறையில் தகைமைகளுக்கான கேள்வி நிறைவு செய்யப்படவேண்டியிருந்தது. எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கு முகாமையாளர்கள் விருத்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன தொழில் சார்

ரீதியாக அவற்றுக்கு முகங் கொடுப்பதற்கு தயார்படுத்தப்பட வேண்டி இருந்தது. இக்கைத்தொழிலில் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத் தன்மை மற்றும் அதன் நிலைபெறு தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு இவ்விடைவெளி நிரப்பபட்டு பெருந்தோட்ட துறையிலுள்ள சிரேஷ்ட மற்றும் நடுத்தர மட்ட அலுவலர்களுக்கான பெரும்பாக மற்றும் நுண்பாக மட்டங்களில் விஞ்ஞான கொள்கைசார் மற்றும் முகாமைத்துவ தகைமைகளை உயர் தரத்தில் வழங்க வேண்டியிருந்தது. இந்நோக்கத்திற்காக அனைத்தையும் உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட வேண்டியிருந்தது. அதற்கேற்ப அதிக முயற்சிகளை மேற்கொண்டு பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் விஞ்ஞான மாணி 2006ஆம் ஆண்டிலிருந்து தோற்றம் பெற்றதுடன் வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் இணைந்து காணப்பட்ட தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு வழங்கப்படுகின்றன. இது 3 வருட கற்கைநெறி ஒன்றாவதுடன் தொலைக்கல்வி கற்றல் பாட நெறியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்பத்தில் 21 பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் இப்பாடநெறிக்கு பதிவு செய்ததுடன் 2008 இல் 17 பேர் சித்தியடைந்தனர். ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை மற்றும் கற்கைநெறியினை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோரின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது

| ***ஆண்டு*** | ***பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை*** | | ***சித்தியடைந்தோர் எண்ணிக்கை*** |
|---|---|---|---|
| 2006 | 21 | | 17 |
| 2007 | 17 | | 11 |
| 2008 | 35 | இறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது | 21 |
| 2009 | 34 | | |
| 2010 | 47 | பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது | |
| 2011 | 32 | | |
| 2012 | 54 | | |
| 2013 | 87 | | |



2009/2010 ஆம் மாணவர்களின் இறுதிப்படுத்தப்படவுள்ளது. 2013 இல் 116 மாணவர்கள் வாய்மொழிப்பரீட்சைக்கு தோற்றி பட்டப்படிப்பு கற்கைநெறியினை தொடர்வதற்கு 87 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேற்குறித்த வரைபடம் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் விஞ்ஞானமானி பட்டப்படிப்புக்கான கேள்வி கனிசமான அளவு அதிகரித்துள்ளது என்பதனையும், சாத்தியமான போக்கொன்றினையும் காண்பிக்கின்றது. அபேட்சகர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தினால் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

வயம்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டப்படிப்பு கற்கை நெறியினை வழங்குவது நிறுவனத்திற்கு கௌரவமிக்க ஒன்றாகும்.




SRILANKA



## 4.7 ஆலோசனைச்சேவைகள்

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ பிரதான குறிக்கோள்களில் ஒன்று பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்புபட்ட வேறுபட்ட விடயங்களில் ஆலோசனைச் சேவையை வழங்குவதாகும். வேறுபட்ட அரசாங்க/தனியார் நிறுவனங்களுக்காக அத்தகைய சேவைகளை 1987 இலிருந்து வழங்கி வருகின்றது. மீளாய்விற்கு உட்பட்ட ஆண்டிலிருந்து நிறுவனம் வேறுபட்ட நிறுவனங்களுக்கு ஊழியர்களை தெரிவு செய்வதற்கும் பதவியுயர்த்துவதற்கும் 11 பரீட்சைகளை நடாத்தியுள்ளது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| *நிறுவனம்* | *பரீட்சைகளின் எண்ணிக்கை* | *ஆபேட்சகர்களின் எண்ணிக்கை* | *ஈட்டுப்பட்ட வருமானம் (ரூபா)* |
|---|---|---|---|
| தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை | 05 | 260 | 209,095.00 |
| இலங்கை தேயிலைச் சபை | 03 | 247 | 228,751.10 |
| தெங்கு ஆரராய்ச்சி நிறுவனம் | 03 | 206 | 92,737.50 |
| தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை | 01 | 83 | 198,379.75 |
| **மொத்தம்** | **11** | **796** | **728,963.35** |

### 4.8 நூலக வசதிகள்



நிறுவனத்தின் நூலகத்தில் தேயிலை, இறப்பர், தெங்கு, மரமுந்திரிகை, கரும்பு, கணக்கியல், முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், உற்பத்தி மற்றும் தர முகாமைத்துவம், ஏனைய முதலிய துறைசார் நூல்கள் 6000 இருப்பில் உள்ளன. பெருந்தோட்ட முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அந்நூலகத்தில் இரவல் பகுதி மற்றும் பகுதி ஆகிய இரண்டும் உள்ளன. இந்நிறுவனத்தின் நீண்ட கால நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவோருக்கும் நேர்ச் சிந்தனை மற்றும் ஊழியர்களுக்கும் பயன்படுத்துவதற்காக இரவல் பகுதியும் குறுங்கால நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவோருக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் பயன்படுத்துவதற்காக வாசிப்பு பகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

#### 4.9 நிறுவனத்தின் தொழில்சார் அங்கத்துவம்

மீளாய்வு ஆண்டுக்குன் தகைமை உடைய பெருந்தோட்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கான தொழில்சார் அங்கத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக தகவு திறனானது 1979 ஆம் ஆண்டு 45 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தமான 1987 ஆம் ஆண்டு 5 ம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கதப்பட்டது இந்தச் சபையாளது அங்கத்துவத்திற்காகன புதிய விண்ணப்ங்களை அனுமதித்ததோடு 2012ல் அங்கத்துவத்திற்காகன 7 விண்ணப்பஙகை வழங்க முடிவு செய்தது. ஓவ்வொரு துறையின் கீழும் வழங்கப்பட்ட மொத்த அங்கத்துவங்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| கௌரவ அங்கத்துவம் | - | 20 |
| மொத்த அங்கத்துவம் | - | 198 |
| நிறுவன அங்கத்துவம் | - | 18 |
| மாணவர் அங்கத்துவம் | - | 02 |
| **மொத்த தொகை** | - | **238** |

## 4.10 வெளியீடுகள்

கடந்த ஆண்டுகளில் நடத்திய விதமாக நிறுவனத்தினால் மீளாய்வு ஆண்டிலும் பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான சஞ்சிகையின் 2 தவணைகள் மற்றும் 3 மாத செய்தித்தாள் வெளியிடப்ட்டுள்ளது. பயிர் ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த திறமையான தோட்ட நிர்வாகிகளால் தயாரிக்கப்பட்ட கடிதங்களில் இவ் சஞ்சிகைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. கையேடு, எழுத்தாளர்களின் வர்ணப் புகைப்படங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய படங்களை உட்சேர்ப்பதனூடாக அதன் வடிவத்தில் மாற்றம் செய்து சதமர்ப்பிக்கப்பட்டது. பேராசிரியர்.எஸ்.ஜே.பி.ஏ.ஜயசேகர – உப வேந்தர், வயம்ப பல்கலைக்கழகம். பேராசிரியர்.மே.பி.எம்.பொன்சேகா – கணக்கீட்டுத் திணைக்களம், ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கலாநிதி காமினி செனவிரத்ன - பணிப்பாளர், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், கலாநிதி.(திருமதி)எஸ்.ரணசிங்க – தலைவர், பயிர் உடற்கூற்றியல் திணைக்களம், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், திரு.பி.ஏ.டி.சமரஸ்ரீ - தலைவர், ஆலோசனைப் பிரிவு, தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியோரை பதிப்பாசிரியர் குழு உள்ளடக்கியிருந்தது. பிரதம பதிப்பாசிரியர் முன்னால் இறப்பர் ஆராய்ச்சி நிறுவன பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) கலாநிதி.என்.யோகரட்ணம் ஆவார். கையேட்டின் மேம்படுத்தப்படட தரத்தின் காரணமாக பெருந்தோட்ட நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பெருந்தோட்டங்களுடன் தொடர்புடைய நிறைவேற்று அலுவலர்களிடையே அதிகளவிலான கேள்வி காணப்பட்டது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின்போது கலாநிதி.யோகரட்ணம் அவர்களினால் பதிப்பிக்கப்பட்ட கையேடு மற்றும் செய்திக்கடிதங்களிலிருந்து ரூபா 42000 ஈட்டப்பட்டதுடன் இது சிறு உடைமையாளர்களுக்கு

இலவசமாக வினியோகிக்கப்பட்டது. அத்துடன் இலவச பிரதிகள் பயிர் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், பெருந்தோட்ட துறையுடன் தொடர்புபட்ட தரகர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன.

**4.11 வளாகத்தினுள் கிடைக்கப்பெறும் வசதிகள்**

உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்விச் சந்தையில் தோன்றுகின்ற தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தரப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் ஊடாக பயிற்சி நிலையம் ஒன்றுக்கு தேவையான அனேகமான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் நிறுவனம் கொண்டுள்ளது. அத்துருகிரிய நிலையத்தில் காணப்படும் வசதிகள் குளிரூட்டப்பட்ட 3 விரிவுரை மண்டபங்கள், தரமுயர்த்தப்பட வேண்டியுள்ள அச்சு அலகு ஒன்று, ஓடியோ-விசுவல் பிரிவு, ஒரே தடவையில் 200 பேருக்கு வசதியளிக்கக்கூடிய கேட்போர் கூடம், 6000 இற்கு மேற்பட்ட புத்தகங்களுடனான நூலகம், 60 பேருக்கான தங்குமிட வசதிகளுடன் கூடிய விடுதி போன்ற வசதிகளை உள்ளடக்குகின்றது.

தலைமை அலுவலகம் அனைத்து நிருவாக தேவைப்பாடுகளையும் கொண்டு நடாத்துகின்ற அவசியமான சேவைகளை வழங்குவதுடன் ஏனைய அனைத்து வசதிகளையும் வழங்குகின்றது.வளாகத்தினுள் மீள்புதுப்பிக்க வேண்டிய பணிப்பாளருக்கான பங்களா ஒன்று காணப்படுவதுட்ன் இது பதிவியினருக்கான 5 வதிவிட விடுதிகளுக்ணுகு மேலதிகமானதாகும். 2011 இல் 8 வாகனங்கள் காணப்பட்டன. இதில் இரண்டு 20 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததுடன், 4 வாகனங்கள் 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்தவை. 20 வருடங்கள் பழைமை வாய்ந்த 2 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டு 2 புதிய வாகனங்கள் அதே ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் அநேகமான பயிற்சிகள் தோட்டங்களில் நடாத்தப்படுவதனால் பயிற்சியுடன் தொடர்புபட்ட நிறுவன திட்டத்தில் குறிப்பிடப்பட்ட போக்குவரத்து தேவைகளை நிறைவு செய்வதற்கு தற்போது காணப்படும் வாகனங்கள் போதுமானவை அல்ல. 4 பழைமை வாய்ந்த வாகனஙற்கள் 2013 இல் விற்பனை செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2011இல் உள்ளக வீதிகளை பழுது பார்ப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட நடைமுறைறயினை பின்பற்றி கேள்வி மனுக்கள் வரவழைக்கப்பட்டன. ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஆனால் ஆரம்பப் பணிகளை நிறைவு செய்தததன் பின்னர் ப்பந்ததராரர் ஒப்பந்தத்தை கைவிட்டார். இதன் காரணமாக நிறுவனம் உள்ளக வீதி புதுப்பித்தலினை 2012 இற்டகு காலம் தாழ்த்து வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வேறுபட்ட கட்டங்களில் வேறுபட்ட மதிப்பீடகளை சமர்ப்பித்திருந்தமையினால் 2012இல் கூட இப்பிணியினை நிறைவு செய்வதற்கு சாத்தியமிருக்கவில்லை. இதனால் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகார சபை குறைந்த விலைமனுவுக்கு உடன்பட்டதுடன் 2013இன் முதற் காலாண்டில் இப்பணியினை நிறைவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இது பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் தலையீட்டினால் சாத்தியமானது.

இப்போது பாவனைக்கு எடுக்கப்பபட்டுள்ள பணிப்பாளர் இருக்கும் கட்டிடத்தொடர், நிர்வாகப்பிரிவு அமைந்துள்ள கட்டிடம், மற்றும் தலைவர் இருக்கும் கட்டிடம் போன்ற கட்டிடங்கள் மிக சிதைந்த நிலையிலும் மீள திருத்தப்பட முடியா நிலையிலும் உள்ளன. இக்கட்டிடங்கள் யாவுமே இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் பழமைவாய்ததது.

நிறுவனத்திற்கு உரித்தான பொகவந்தலாவை தெரேசியா தோட்டத்தில் அமைந்துள்ள பிரதேச பயிற்சி மத்திய நிலையத்திற்கு உரித்தான பயிற்சி நிறுவனம் ஒன்றிற்கு தேவையான சகல வசதிகளும் உள்ளன. நகர மண்டபத்தில் ஒரு தடவைக்கு 60 பேருக்கான வசதிகள் செய்ய கூடிய அதேவேளை நடுத்தர அளவிலான இரு விரிவுரை மண்டபங்களில் 100 பேருக்கான போதிய வசதிகள் காணப்படுகின்றன.

அத்துடன 70 பேருக்கு தங்குமிட வசதி செய்யக்கூடிய அதேவேளை பரந்த அளவிலான உணவு விடுதி ஒன்று , 03 அலுவலக அறைகள், 600 நூல்களுடன் அமைக்கப்பட்ட சிறிய நூலகம், விடுதி முகாமைத்துவத்திற்கான தங்குமிட வசதிகள் மற்றும் ஒரு தடவைக்கு 10 பேர் தங்கக்கூடிய உல்லாச பிரயாணிகள் பங்களா ஒன்றும் உள்ளன. இப்பிரதேச மத்தியநிலைய பொறுப்பதிகாரி விடுதி முகாமையாளராவார். அவரைத் தவிர நிரந்தர ஊழியர்கள் வேறு எவரும் இல்லை. அத்தோடு தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பணிப்பாளரின் அனுமதியுடன் தினக் கூலி முறையின் கீழ் தொழிலாளர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர். அத்தோடு அமைய முறையின் கீழ் காவலர்களாக இரு வேலையாட்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். நிகழ்காலத்தில் இவ் தங்குமிட வசதிகள் கொரிய தொழில் பயிலுனர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வருகைத்தருவோர் பொருட்டு விடுதி மற்றும் சகல வசதிகள் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பானது விடுதி முகாமையாளருக்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரிடம் 15,000/- ரூபாய் தொகை கட்டுநிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. விடுதி முகாமையாளரது பொறுப்புக்களோடு மத்திய நிலையத்தை முறையாக நடாத்திச்செல்லல், தொழிலாளரின் வரவை அறிக்கைப்படுத்தல், அவர்களது சம்பளத்தை நிர்ணயித்தல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான உணவுப் பண்டங்களை கொள்வனவு செய்தல், மற்றும் ஏற்பாடுகளை செய்துகொடுத்தல் ஆகிய நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.







## 4.12 2013 ஆம் ஆண்டிற்கான விளம்பரக் குறிப்பேடு.

தொரடகின்ற ஆண்டிற்காக விளம்பர்க குறிப்பேடம்டினை தயாரிப்பதற்க பங்குதாரர்களுடன் கூட்டமொன்றினைக் கூட்டுவது நிறுவனத்தின் நடைமுறையாக இருந்தது. பயிர் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பெருந்தோட்ட துறையுடன் நேரடியாக தொடர்புபட்ட ஏனைய நிறுவனங்களிலிருந்து அனைத்து பங்'குதாரர்கள் மற்றும் சிறு உடைமையாளர்கள் அத்தகைய கூட்டமொன்றுக்கு அழைக்கப்படுகின்றனர். ஆனால் பங்குதாரரர்களின் கருத்துக்கள் உறுதிப்படுத்தப்பட்டு கருத்திற் கொள்ளப்பட்டிருந்த மனித வள முகாமைத்துவம், நிதியியல் முகாமைத்துவம், பயிர்ச் செய்கை மற்றும் பதப்படத்தல நடைமுறைகள் போன்றவை தவிர பல மாற்றங்கிளின்றி தொடர்வதற்கு தீர்மானிக்கப்படடிருந்தமையினால் 2013 ஆம் ஆண்டிற்கான விளம்பர் குறிப்பேட்டினைத் தயாரிப்பதில் இது பின்பற்றப்படவில்லை.

எனினும் உள்ளக மற்றும் வெளிவாரி வள ஆளணியினர் மற்றும் 2011 இலும் 2012 இலும் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்த பங்குபற்றுனர்கனின் கரத்துக்களும், ஆலோசனைகளும் விளம்பரக்குறிப்பேடு தயாரிக்கையில் கருத்திற் கொள்ளப்கபட்டன. மேற்குறித்தெ கருத்துரைகளை அடிப்படையாகக் கொண்டு சில தொழில் சார் நிகழ்ச்சித்திட்டகளும், சிறு உடைமையாளர் நிகழ்ச்சித்திட்டங்'களும் விளம்பரக் குறிப்பேட்டில் உள்ளடக்கப்பட்டன. அதற்கமைய 2013ம் ஆண்டிறகான விளம்பரக் குறிப்பேடு பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்ககுகின்றது.

| | | |
|---|---|---|
| கல்விசார், தொழில்சார் நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 17 |
| முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 05 |
| திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 06 |
| ஊக்குவித்தல் கற்கைநெறிகள் | - | 02 |

**<u>வேண்டுதலின் பேரில் வழங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்</u>**

| | | |
|---|---|---|
| தொழினுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 13 |
| தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | - | 10 |

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பொதுத்திறைசேரியினால் அளிக்கப்பட நிதியினை பபயன்படுத்தி சிறு உடைமையாளர்களுக்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| தேயிலை சிறு உடைமையாளர்களுக்காக | - | 60 |
| இறப்பர் சிறு உடைமையாளர்களுக்காக | - | 50 |

| | | |
|---|---|---|
| தெங்கு சிறு உடைமையாளர்களுக்காக | - | 50 |
| கரும்பு சிறு உடைமையாளர்களுக்காக | - | 10 |
| மரமுந்திரிகை சிறு உடைமையாளர்களுக்காக | - | 10 |
| பனை சிறு உடைமையாளர்களுக்காக | - | 10 |
| கறுவா சிறு உடைமையாளர்களுக்காக | - | 10 |
| **மொத்தம்** | - | **200** |

அதற்கமைய 2013 இல் குறைந்தது 253 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**4.13 பயிற்சி செயற்பாட்டின் புதிய பரிமாணங்கள்**

2013 இற்கான விளம்பரக் குறிப்'பேட்டில் குறிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பின்வருவது போன்று பெருந்தோட்ட துறையில் இணைக்கப்பட்டுள்ள வேறுபட்ட வகை ஆளணியினருக்காக சில புதிய வகை நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்கும், வடிவமைப்பதற்கும் 2013 இன் ஆரம்பப் பகுதியில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இந் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதான குறிக்கோள் தோட்ட/தொழிற்சாலை அலுவலர்களுக்கு உயர் கல்வி வாய்ப்பினை வழங்குவதாகும்.

அ. குறைந்தது 5 வருட அனுபவம் கொண்ட விசேடமாக தேயிலைத் தோட்ட அலுவலர்களுக்கான *தேயிலைப் பயிர்ச்சசெய்கை* பற்றிய புதிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை உருவாக்குதல்.

ஆ. தேயிலைத் தொழிற்சாலை முகாமைத்துவத்தில் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள தேயிலைத் தொழிற்சாலை அலுவலர்களுக்காக *தேயிலை தயாரிப்பு மற்றும் தொழிற்சாலை முகாமைத்துவம்* பற்றிய புதிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை வடிவமைத்தல்.

இ. பெருந்தோட்டங்கிள்ல தமது நாளாந்த செய்றபாடுகளுக்கு தடங்கலின்றி பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா கற்கை நெறியினைப் பயிலுவதற்கு பங்குபற்றுனர்களை இயலச் செய்வதற்கு தற்பொது இடம்பெற்றுவரும் இக்கற்கை நெறியினை தொலைக்கல்வியாக நடாத்துதல். இந்நோக்கத்திற்காக பாட அலகுகள் திறந்த பல்கலைக்கழகத்தின் அலுவலர்களின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பாட அலகுகளுக்கு பாட அலகுகள் எழுதுவது பற்றிய பயிற்சியின் பின்னர் ஈபட அலகுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஈ. ஆர்வமிக்க வெளிநாட்டவர்களுக்காக நிறுவனத்தின் சேவையினை விரிவு படத்தல் மற்றும் அதனூடாக வருமானத்தை அதிகரித்தல் நோக்குடன் வெளிநாட்டு மாணவர்களுக்கா

தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் தயாரித்தல் பற்றிய சில கிரமமான நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.



## 5.0 நிருவாகப் பிரிவு

உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) நிருவாகப் பிரிவின் தலைவராக பணியாற்றுகின்றார். ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட மொத்த பதவியணி 39 ஆகும். ஆனால் எமது ஆட்சேர்ப்பு தகைமைகள் உயர்வாக உள்ள அதேவேளை வழங்கப்படும் சம்பளம் போட்டித்தன்மை அற்றிருப்பது போன்ற காரணங்களினால் இவ்வாண்டின் போது சில பதவி வெற்றிடங்களை நிரப்புவது சாத்தியமற்றதாகவிருந்தது. பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) மற்றும் விடுதி முகாமையாளர் போன்ற பதவிகளுக்காக மூன்று தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கு மிகக் குறைந்த ஆர்வமே காட்டப்பட்டது. விண்ணப்பத்திருந்தவர்கள் வேண்டப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. வேண்டப்பட்ட தகைமையுடையோர் அவர்கள் வேண்டியதற்கேற்ப உயர்ந்த சம்பன அளவுத் திட்டத்தில் தாம் வைக்கப்பட நிறுவனம் உடன்படாது என்று நியமனத்தை ஏற்க மறுத்தனர். ஆட்சேர்ப்பு திட்டம் எவரேனும் ஆளொருவர் அவரது தகைமைகள் மற்றும் அனுபவத்தை கருத்திற் கொள்ளாது சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படியில் வைக்கப்பட வேண்டும் என்று தெளிவாக கூறுகின்றது. இந்நிபந்தனை நிறுவனத்திற்கு தகைமையுடைய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தடையாக இருந்து வருவதுடன், வெற்றிடங்கள் நிரப்பாமையின் காரணமாக நிறுவனத்திற்கு பாரியளவிலான செலவொன்றில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஆளணியினை ஆட்சேர்ப்பு செய்வதற்கு மோசமான தடையொன்றாகவும் இருந்து வருகின்றது.

சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த பதவியணி முன்மொழிவுகளில் பயிற்சி நிபுணர் (விவசாயம்), பயிற்சி நிபுணர் (சமூக அபிவிருத்தி), உதவிக் கணக்காளர், விடுதிக்கான சமையற்காரர், பொகவன்தலாவ பயிற்சி நிலையத்திற்கான காவலாளி போன்ற முக்கிய பதவிகள் காணப்பட்டன. துரதி'டவசமாக அப்பதவிகள் அப்போதைய நிறுவனத்தின் தொழிற்பாட்டு நிலையினை

கருத்திற் கொண்டு சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படவில்லை. இது தற்போது மீளாயப்பட வேண்டும்.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டின் நிறுவனத்தின் செயற்றிறன்கள் தெளிவான வளர்ச்சியைக் காட்டுகின்றன. அதற்குள் மிகவும் வெளிப்பாடாக தெரிவது சிறுதோட்ட உரிமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாகும். இவ் நிகழ்ச்சித்திட்டமானது சிறுதோட்ட உரிமையாளர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் ஆகும். இதற்கு புறம்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் சிறுதோட்ட உரிமையாளர்களுக்காக பயிற்சித்திட்டங்கள் நிகழ்ந்தன. இவ் நடவடிக்கையால் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி பிரிவுகளில் செயற்பாடுகள் விருத்தியடைந்துள்ளது. அவ்வாறு தற்காலிகமான கூட்டிணைந்த திட்டத்தில் கீழ் வரும் பதவிகள் புதிதாக உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- கொள்வனவு அலுவலர் - 01
- உள்ளக கணக்காய்வாளர். - 01
- உதவி கணக்காளர் - 01
- சாரதி - 02
- தவிசாளரின் பிரத்தியேக உதவியாளர் - 01
- உள்ளக கணக்காய்விற்கான முகாமைத்துவ உதவியாளர்- 01
- விடுதி உதவியாளர் 01
- தோட்ட தொழிலாளி 02
- காவலாளி 02
- சமைற்காரர் 02

தற்போது கொள்வனவை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள புறம்பான ஒரு அதிகாரி இல்லை. அவ் நடவடிக்கைகள் முறையற்ற விதமாக நிகழ்கின்றன. அவ்வாறான நேரங்களில் களஞ்சிய பொறுப்பாளரால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுவதோடு சில சந்தர்ப்பங்களில் வேலை பரீட்சகரால் இவ்விடயம் மேற்கொள்ளப்படும். இவ் முறையற்ற செயற்பாடுகள் கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்டன. உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இன்மை தவறென அரச கணக்காய்வாளரால் பலதடவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நிகழ்காலத்தில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் ஆகும். அவருக்கும் வேலைப்பழு அதிகம் என்பதால் இவ் நடவடிக்கை முறையாக மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக கொள்வனவை ஆரம்பிக்கும் அதிகாரிப்பதவி மற்றும் உள்ளக கணக்காய்வாளர் பதவியை உருவாக்க இற்றைப்படுத்தப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு பிரதான அலுவலகத்தில் விடுதிகளுக்காக விடுதி முகாமையாளர் ஒருவர் இன்மையால் இவ்நடவடிக்கைகள் வேலை பரிசீலிப்பவரால் மேற்கொள்ளப்படுகின்றது. தேவையான உணவு பண்டங்களை கொள்வனவு செய்யும் பணி 06 மாதங்களாக நியமிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்களினால் மேற்கொள்ளப்படுகிறது. மிகப் பொறுப்பு வாய்ந்த கொள்வனவு செய்தலை உறுதிபடுத்துவதற்காக இவ் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. அத்துருகிரியவிலும் பொகவந்தலாவையிலும் அமைந்துள்ள இரு விடுதிகள் மூலமான பயிற்சி நிகழ்ச்சிகளுக்கான

தங்குமிட வசதிகள் மற்றும் உணவு,பாண வசதிகள் வழங்கப்பட்டன. இங்கு நிகழும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக ஒரு நபருக்கு ஒருநாளைக்கு 850 ரூபாய் அறவிடப்படும் அதேவேளை தங்குமிட கட்டணமா 250 ரூபாய் அறவிடப்படும். இக்கட்டணங்கள் குறிப்பிட்ட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க மாத்திரமேயாகும். எவ்வாறாயினும் இவ் மத்திய நிலையங்களில் ஏற்படுத்தப்படும் தங்குமிட, உணவு வசதிகள் பெற்றுக்கொண்டவர்கள் இது தொடர்பில் மிக சிறப்பாக கருத்து தெரிவித்தனர். இவ் வசதிகளை இன்னும் சிறப்புற வழங்குதலே நிறுவனத்தின் நோக்காக உள்ளது.

மீளாய்வு ஆண்டின் போது கொரியாவில் தொழில் தேடுபவர்களுக்காக பயிற்சி வசதிகளை வழங்குவதனை நிறுவனம் தொடர்ந்து முன்னெடுத்தது. எனவே, நிறுவனமானது இதன் கீழ் ஒப்பந்த அடிப்படையில் சில ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தது. 6 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 3 அலுவலக உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். இவ்ஆட்சேர்ப்புகளுக்காக சபை அங்கீகாரம் வழங்கப்பட்டு கொரிய நிகழ்ச்சித் திட்டங்களினால் ஈட்டப்பட்ட வருமானத்தினை கொண்டு குறித்த சம்பளங்கள் கொடுப்பனவு செய்யப்பட்டன.

இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க, கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு 4.5 ஏக்கர் வெற்றுக் காணியும் அதிலுள்ள 3 பதவியினர் விடுதிகளும் இராணுவ முகாம் ஒன்றினை தாபிப்பதற்கு இலங்கை இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டது. இவ் ஆதணத்தின் பெறுமதி விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் ரூபா. 55 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அப்பணத்தினை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கௌரவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களின் ஆலோசனை மற்றும் பணிப்புரையினை அடிப்படையாகக் கொண்டு விசேடமாக சிறு உடைமையாளர்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக இப்பணத்தினை பயன்படுத்தி கேகாலை, காலி, மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் பிராந்திய நிலையங்களை தாபிப்பதற்கான சாத்தியம் பற்றி கருத்திற் கொள்ளப்படுகிறது. அத்துடன் தற்போது காணப்படும் கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்கும் நிறுவனத்தினால் வழங்கப்படும் வசதிகளையும் சேவைகளையும் மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 6.0 கணக்கியற்பிரிவு.

கணக்கியலாளர் கணக்கியற்பிரிவின் தலைமை அதிகாரியாக செயற்படுவார். முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் நிறுவனத்திற்குரிய செயற்குழுவை நியமிக்கும் போது கனிஸ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருந்த முகாமைத்துவ பதவி மத்திய முகாமைத்துவ மட்டம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு காரணம் இப்பதவிக்குரிய பொறுப்பினது தன்மையாகும். அவ்விதமே கனிஸ்ட முகாமைத்துவ மட்டத்தில் கணக்கியலாளராக கடமை புரிந்த எல்.டி.பே. பிரியந்த அவர்கள் குறித்த உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். அவரது கடமைகளில் நேர்மையான தன்மை, பிரத்யேகமாக தெரிதல் மற்றும் செயற்றிறன் ஆகிய அவரது தகைமைகள் மற்றும் சேவைக்கால அனுபவம் என்பவற்றைக் கருத்திற்கொண்ட நிர்வாக சபையால் இவ் நியமனம் வழங்கப்பட்டது.

அவ்வாறு இல்லை எனினும் கனிஸ்ட முகாமையாளர் மட்டத்திலான கணக்கியலாளருக்கு மேலதிகமாக மத்திய முகாமைத்துவ மட்டத்தில் கணக்கியலாளர் பதவிக்காகவும் பொருத்தமான ஒருவரை நியமிக்க வேண்டியும் உள்ளது. அத்தோடு இவ் நியமனத்தில் அனாவசியமான செலவுகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

முன்னைய ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தின் படி இவ் ஆண்டில் கொள்வனவை ஆரம்பிக்கும் நடவடிக்கைக்காக பிரத்தியேகமாக ஒரு பிரிவோ பிரத்தியேகமாக ஒரு அதிகாரியோ இல்லை. அதற்கான பொருத்தமான ஒருவர் நிறுவனத்தில் இல்லாத அதேவேளை இக்காரணத்தால் நிறுவனத்தின் கொள்வனவை ஆரம்பித்த நடவடிக்கைகள் முறையற்ற விதமாக மேற்கொள்ளப்பட்டன. கொள்வனவை ஆரம்பித்தல் ஒப்பந்தம் மற்றும் விலைமனு கோரல் ஆவணங்களை தயார்செய்தல் மற்றும் விலைமனுகோரல் ஆகிய நடவடிக்கைகள் நிர்வாகப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட அதேவேளை ஒப்பந்தத்தை கையளித்தல் ஒப்பந்தம் கைச்சாத்திடல் , குறித்த கட்டணம் செலுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய நடவடிக்கைகள் கணக்கு பிரிவின் மூலம் பணிப்பாளரின் முழு மேற்பார்வையின் கீழ் இடம்பெற்றது. இவ் முறையற்ற செயலொழுங்கானது பொருத்தமற்றது என்பதுடன் கண்காய்வாளரின் ஆலோசனைக்கு இணங்க கொள்வனவு அதிகாரி ஒருவரின் வேலையை இற்றைப்படுத்தல் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கான முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கும் என நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

நிறுவனத்திற்காக பிரத்தியேக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை. நிறுவனத்தின் செயற்குழுவிற்கான அனுமதியை பெற்றுக்கொள்ளும் போது உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க விண்ணப்பிக்கப்பட்டமைக்காக அனுமதி கிடைக்கவில்லை. இதனால் மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் பெருந்தோட்டக் கைத்தொழிலமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்டன. இற்றைப்படுத்தல் கூட்டிணைந்த திட்டத்தின் உள்ளக கணக்காய்வு பதவியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு ஆண்டின்போது, பதவியினர் விடுதிகளுக்கு நீர் வசதி வழங்குதல் ஊடாக பொகவன்தலாவ பயிற்சி நிலையத்தினையும் கொரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சாப்பாட்டு அறை உருவாக்குவதற்காக அத்துருகிரிய விடுதியின் வாகன தரிப்பிடத்திற்கு சீமெந்து இடுவதன் ஊடாக புதிப்பிப்பதற்கு ரூபா. 1.65 மில்லியன் செலவிடப்பட்டது. 2012ஆம் ஆண்டின் போது நிறுவனத்தினால் ரூபா. 26.462 மில்லியன் ஈட்டப்பட்டது. கொரிய நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து ஈட்டப்பட்ட ரூபா. 8.66 மில்லியன் வருமானமும் இத்தொகையில் உள்ளடக்கப்பட்டது. வசதிகளை வாடகைக்கு விடுவதன் ஊடாக (கொரிய நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர) அத்துருகிரிய நிலையத்தில் ரூபா. 2.07 மில்லியன் தொகையினையும் பொகவன்தலாவ பயிற்சி நிலையத்தில் ரூபா. 0.64 மில்லியன் தொகையினையும் நிறுவனம் ஈட்டக்கூடியதாக இருந்தது. பொகவன்தலாவ பயிற்சி நிலையத்தில் ஈட்டப்பட்ட மொத்த தொகை ரூபா. 3.796 மில்லியன் ஆகவிருந்தது.

அதேவேளை மல்டிமீடியா புரஜெக்டர்கள், கணனிகள் மற்றும் நூலக புத்தகங்கள் போன்ற பல்வேறு உபகரணங்களின் கொள்வனவு மீது ரூபா. 0.908 மில்லியன் செலவிடப்பட்டது. மீளாய்வு ஆண்டின்

போதான மொத்த செலவினம் ரூபா. 8.112 மில்லியன் ஆகவிருந்தது. இதனைத் தவிர அறவிடுவதற்கு சாத்தியமற்ற ரூபா. 124,000 தொகையொன்று ஆளுகை சபையின் அனுமதியின் கீழ் கணக்குப் புத்தங்களிலிருந்து பதிவளிக்கப்பட்டது. மீளாய்வு ஆண்டின் போது மீண்டெலும் மற்றும் மூலதன செலவினத்திற்கான பொதுத் திறைசேரி முறையே ரூபா. 8.48 மில்லியன் மற்றும் ரூபா. 7.0 மில்லியன் தொகையினை அளிப்பு செய்தது. ஆண்டின் போதான நிறுவனத்தின் மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா. 39.804 மில்லியன் ஆகவிருந்தது. இத்தொகை ரூபா. 9.725 மில்லியனுக்கு சமனான தேய்மானம் தவிர்ந்ததாகும். நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூபா. 44..357 மில்லியன் ஆகும். எனவே, இவ்வாண்டில் ரூபா. 5.231 மில்லியன் பற்றாக்குறை ஒன்று காணப்பட்டது. எனினும் நிறுவனமானது 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84% குறைப்பொன்றினை காண்பித்து 21% பொதுத் திறைசேரி மீது மீண்டெழும் செலவினத்திற்காக தங்கியிருக்கின்ற வீழ்ச்சியொன்றினை மேற்கொள்ளக்கூடியதாகவிருந்தது.

நிறுவனமானது தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு மற்றும் மரமுந்திரிகை சிறு உடைமையாளர்களுக்காக இதே நோக்கத்திற்காக திறைசேரியினால் அளிக்கப்பட்ட ரூபா. 4.865 மில்லியன் தொகையினை செலவிட்டு 188 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. இவ்வாண்டின் போது பயன்படுத்த முடியாது பொருட்கள் மற்றும் உபகரணங்களை அகற்றி விற்பனை செய்வதன் மூலம் ஈட்டப்பட்ட தொகை ரூபா. 0.064 மில்லியன் ஆக இருந்தது.

அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கமைய 2013 இல் உள்ளக வீதிகள், பொது மலசலகூடங்கள், 5 பதவியினர் விடுதிகள் மீள் திருத்தலுக்காக ரூபா. 13.7 மில்லியன் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 7.0. கடந்த ஆண்டின் முன்னேற்றம்

2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 104 இலிருந்து 249 ஆக அதிகரித்து முன்னைய ஆண்டினை விட 139.4% அதிகரிப்பொன்றினை தோற்றுவிக்கின்றது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 இன் போது நிகழ்ச்சித் திட்ட அதிகரிப்பு 131% ஆக இருந்தது. பயிற்றுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, பயிற்சி நாட்களின் எண்ணிக்கை,ஈட்டப்பட்ட வருமானம் என்பவற்றை கருத்திற் கொள்கையில் நிச்சயமான அதிகரிப்பொன்றினை காணக்கூடியதா உள்ளது. பயிற்சிப் பிரிவில் பதவியணி குறைந்ததற்கு மத்தியிலும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையின் 179% இனை நிறுவனம் அடையப்பெற்றது. 2011 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் 116% ஆக இருந்தது. ஆனால் பயிற்சி பீடத்தின் அங்கத்துவர் எண்ணிக்கை 2012 இலும் அதிகரிக்கவில்லை.

நிகழ்ந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான சஞ்சிகையில் 2 பகுதிகளும் செய்தித்தாளில் 4 பகுதியும் வெளியிட முடிந்தது. அத்தோடு இலங்கைத் தேயிலைச்சபை சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்காக இணைத்துக் கொள்வதற்கான 4 போட்டிப்பரீட்சைகள் நடைபெற்றன.

நிறுவனத்தின் மொத்த தொழில்சார் அங்கத்துவம் 7 புதிய அங்கத்துவர்களுக்கான அங்கத்துவம் வழங்கப்பட்டமையினால் 238 ஆக அதிகரித்தது. எனினும், குழு 2 விண்ணப்பதாரர்கள் வேண்டப்பட்ட தகைமைகள் நிறைவு செய்யப்படாமையில் இருந்தமையினால் தொழில் சார் அங்கத்துவத்தினை நிராகரித்தது. அத்துருகிரியவில் உள்ள நூலகமும், பொகவன்தலாவ பயிற்சி நிலையத்திலுள்ள சிறு நூலகமும் தோட்ட முகாமைத்துவத்தில் பல்வேறு துறைகளுடன் தொடர்புடைய முறையே 6000 மற்றும் 600 புத்தகங்களை கிடைக்கச் செய்கின்றன.

மீளாய்வு ஆண்டின்போது, பதவியினர் விடுதிகளுக்கு நீர் வசதி வழங்குதல் ஊடாக பொகவன்தலாவ பயிற்சி நிலையத்தினையும் கொரிய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சாப்பாட்டு அறை உருவாக்குவதற்காக அத்துருகிரிய விடுதியின் வாகன தரிப்பிடத்திற்கு சீமெந்து இடுவதன் ஊடாக புதிப்பிப்பதற்கு ரூபா. 1.65 மில்லியன் செலவிடப்பட்டது. பல்வேறு அலுவலக உபகரணங்கள், மற்றும் நூலக புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு செலவிட்ட தொகை ரூபா. 0.908 மில்லியன் ஆகவிருந்தது. இது நிறுவனத்தின் பங்கேற்போருக்கு கிடைக்கத்தக்க வசதிகளை தரமுயர்த்துவதற்கு மிகவும் அவசியமிக்க தேவையாக இருந்தது. 2011 இல் நிறுவனம் ரூபா. 36.79 மில்லியன் தொகையினை ஈட்டக்கூடியதாக இருந்தது. அதேவேளை இது 2012 இல் 20.5% அதிகரிப்பினை காண்பித்து ரூபா. 44..357 மில்லியன் வரை அதிகரித்தது. கொரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து ரூபா. 8.66 மில்லியன் ஈட்டப்பட்டது. அதேவேளை முன்னைய ஆண்டில் இது ரூபா. 8.5 மில்லியனாக காணப்பட்டது. மீளாய்வு ஆண்டின்போது பயிற்றுவிக்கப்பட்ட பங்குபற்றுநர் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பொன்று காணப்பட்டது. இது 10,331 ஆளணியாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 142% இற்கு சமமானதாகும். முதற்தடவையாக திறைசேரி இலவசமாக சிறு உடைமையாளர்களுக்காக நிகழ்ச்சியை நடாத்துவதற்கு ரூபா. 5 மில்லியன் தொகையினை அன்பளிப்பு செய்தது. இத்தொகையினை பயன்படுத்தி 188 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் மொத்த தோட்ட விளைச்சல் உற்பத்தியில் சிறு உடைமையாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை வற்புறுத்தியதன் பின்னர் 2013 இல் ரூபா. 8 மில்லியன் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக சிறு உடைமையாளர்கள் (தேயிலை, இறப்பர், தெங்கு, மரமுந்திரிகை, கரும்பு, பனை, கறுவா போன்ற) நாட்டின்

மொத்த உற்பத்தியில் சுமார் 75% வரை பங்களிப்பு செய்கின்றனர். இதனால் பயிர்ச் செய்கையில் அவர்களது திறன் மட்டத்தினை மேன்படுத்துவதற்காக சிறு உடைமையாளர்களுக்காக அதிக நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தபட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விவாதத்துடன் நிறுவனம் உடன்பட்டு சிறு உடைமையாளர்களுக்கான மொத்த நிகழ்ச்சித் திட்டங்களில் 75.5% இனை நடாத்தியுள்ளதுடன் பயிற்றுவிக்கப்பட்ட சிறு உடைமையாளர்களின் வீதம் இவ்வாண்டின் பயிற்றுவிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் 79% ஆகவிருந்தது.

அதற்கமைய நிறுவனம் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை, பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை, பயிற்சி நாட்களின் எண்ணிக்கை,ஈட்டப்பட்ட வருமானம் போன்றன தொடர்பில் 2011 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டின் போது பாரிய முன்னேற்றம் ஒன்றினை அடையப் பெற்றுள்ளது.

## 8.0 நிறுவனத்தினால் எதிர்கொள்ளப்பட்ட தடைகள்

2004 இல் மீள்கட்டமைப்பு செயன்முறை நிகழ்ந்ததன் பின்னர் முன்னைய ஆண்டுகளில் அனுபவம் பெற்றதனைப் போன்று நிறுவனமானது 2012 ஆம் ஆண்டிலும் பல தடைகளை எதிர்கொண்டது. பயிற்சிப் பீடத்தில் பதவியினர் பற்றாக்குறை மிக முக்கிய தடையொன்றாகவிருந்தது. பயிற்சி பீடத்தில் 5 உறுப்பினர்கள் மாத்திரம் காணப்பட்டனர். அவை: பயிற்சி நிபுணர் (முகாமைத்துவம்), பயிற்சி நிபுணர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்), பயிற்சி நிபுணர் (விவசாயப் பொருளாதாரம்) மற்றும் பயிற்சி அலுவலர் (முகாமைத்துவம்) அத்துடன் பதவியினர் உதவியாளர் (பயிற்சி) என்பனவாகும். 2012 இல் நிரப்புவதற்கு சாத்தியமற்ற பல வெற்றிடங்கள் காணப்பட்டன. பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) மற்றும் விடுதி முகாமையாளர் பதவிகளுக்காக செய்திப் பத்திரிகைகள் ஊடாக மூன்று தடைவ விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் இப்பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை. அவர்கள் போதிய தகைமைகளையோ அல்லது அனுபவத்தினையோ அல்லது இரண்டினையும் பெற்றிருக்கவில்லை. மேற்குறித்த பதவிகளுக்காக மூன்றாவது தடவையாக விளம்பரப்படுத்தியதன் பின்னர் பயிற்சி அலுவலர் (கணக்கீடு மற்றும் நிதி முகாமைத்துவம்) இற்காக ஒருவர் தெரிவு செய்யப்பட்டார், விடுதி முகாமையாளர் பதவிக்கு தகைமையுடைய ஆள் தேர்வு விடயப் பரீட்சைக்கு சமுகமளிக்கவில்லை. உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியும் கூட 2011 டிசம்பரில் இரண்டு தடவைகள் விளம்பரம் செய்ததன் பின்னர் நிரப்பப்பட்டது.

ஆட்சேர்ப்புத் திட்டம் இப்பதவிகளுக்காக ஒப்பீட்டு ரீதியாக உயர்ந்த தகைமைகளை வேண்டுகின்றது. மறுமுனையில் எவரேனும் தெரிவு செய்யப்பட்ட ஆள் ஒருவர் தகைமை அல்லது அனுபவத்தை கருத்திற் கொள்ளாது சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படியில் வைக்கப்பட வேண்டும். ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை பயிற்சி பீடத்திற்கு திறன்மிக்க ஆளணியினரை தெரிவு செய்வதில் மோசமான தடையொன்றாக இருந்து வந்தது.

ஏனைய பயிர் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அதேபோன்ற நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் நிறுவனம் குறைவான சம்பளம் வழங்குவதனால் வெற்றிடங்களுக்கு சாத்தியமிக்க பலர் விண்ணப்பிக்க தயங்குகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

நிகழ்காலத்தில் நிறுவனத்தினால் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளுள் மிக முக்கிய பிரச்சினையாக நீண்டகால கல்விப் பாடநெறிகளுக்கு பங்குபற்றுவதற்காக தமது நிறைவேற்றுநர்களை விடுவிக்க அநேக தோட்டக் கம்பனிகள் விரும்பாமையாகும். அதற்கு காரணம் விரிவுரைக்காக அடுத்து அவர்களை விடுவிக்கும் போது தோட்டங்களின் உற்பத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றமையாகும். இதனால் கல்விப் பாடநெறிகளை நடாத்தும் முறையியல்களைத் தொடர்ந்தும் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. ஆரம்பத்தில் டிப்ளோமா பாடநெறி 04 மாதகால முழுநேர பாடநெறியாக இருந்து தோட்ட முகாமைத்துவ கம்பனிகளுக்கு பணிக்கப்பட்ட பின் அதை தொடர்ச்சியாகவன்றி பகுதி பகுதியாக உடைத்து நடாத்த வேண்டி ஏற்பட்டது. (மாதத்திற்கு 06 என) எனினும் நிகழ்காலத்தில் விரிவுரைக்கான இவ் நடவடிக்கை மாதத்திற்கு 3 தடவை 2 தவணையாக நடைபெறுகிறது. இப்பிரச்சினை தொடர்ந்தும் இனங் காணப்படுவதால் விஷேடமாக டிப்ளோமா பாடநெறி தொலைக்கல்வி பாடநெறி போல நடைபெற தற்போது ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிணங்க 2013 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் டிப்ளோமா பாடநெறி தொலைக்கல்வி பாடநெறியாக நடாத்த முடியும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

வார நாட்களில் பாடநெறிகளுக்கு கலந்து கொள்ள விரும்பாமையால் அநேக கல்விசார் பாடநெறிகளை வார இறுதி நாட்களிலேயே நடாத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக மேலதிக நேர கொடுப்பனவு என்பவற்றால் செலவு எதிர்பார்த்ததையும் விட அதிகரித்துள்ளது. இதனால் பல சந்தர்ப்பங்களில் வார இறுதி நாட்களில் வளவாளர்கள் இலவசமாக தமது சேவையை வழங்க வேண்டியும் உள்ளது.

75.5% நிகழ்ச்சித் திட்டங்கள் சிறு உடைமையாளர்களுக்காக நடாத்தப்பட்டிருந்த போதிலும் சிறு உடைமையாளர்கள் இருக்கின்ற பிராந்தியங்களில் இந்நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவது நிறுவனத்தின் நடைமுறையாக இருந்தது. சிலவேளைகளில் வள ஆளணியினரும் ஏனைய உதவியளிக்கும் ஆளணியினரும் சிறு உடைமையாளர்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களை இழந்து தேசிய பெருந்தோட்ட முகாமைத்தவ நிறுவனத்திற்கு வருவதற்கு தயங்கியமையினால் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு 400 கி.மீ. களை விட அதிகமாக பயணம் செய்ய வேண்டியுள்ளது. பிராந்தியங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவது நிறுவனம் அதிக படிகள், மேலதிக நேரக் கொடுப்பனவு செய்வதற்கும், பிரயாணச் செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதனால் நிகழ்ச்சிக்கான செலவில் அதிகரிப்பில் கணிசமான அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நிறுவனம் முகங்கொடுக்கும் மற்றுமொரு பிரச்சினைதான் ஒப்பீட்டில் குறைந்த விரிவுரைக் கட்டணத்தையே வழங்குவதால் மிகவும் திறமை வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த வெளிவாரி வளவாளர்களின் சேவையைப் பெற வாய்ப்பற்று போகின்றமையாகும். நிகழ்காலத்தில் விரிவுரைக்

கட்டணம் மணித்தியாலத்திற்கு 1000 ரூபாயாகும். பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெறும் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது இது குறைந்த கட்டணமாகும். பாடநெறிகளுக்கு உரிய கட்டணத்தை தீர்மானிக்கும் பொழுது இக்கட்டண முறைமையே நடைமுறைபபடுத்தப்படும். நிகழும் விரிவுரைக் கட்டணம் குறித்த விதமாக அதிகரிக்கப்படும் ஆயின், பாடநெறிக் கட்டணமும் அதிகரிக்கும் என்பதால் கலந்து கொள்வோர் தொகையும் குறைவடையக்கூடும். அவ்வாறு நிகழ்ந்தால் எதிர்பார்த்த அளவில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலில் இடையூறு ஏற்படும். எவ்வாறாயினும் மிகவும் நல்ல வெளிவாரி வளவாளர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நிகழும் விரிவுரைக் கட்டண முறையை எதிர்வரும் ஆண்டில் கணிசமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவனத்திற்குள் தற்போது உள்ள 08 வாகனங்களுள் 06 வாகனங்கள் 15 வருட பழைமை வாய்ந்தவை. பேஜரோ ஜீப் வண்டி 25 வருடத்திற்கும் அதிக பழைமையானதாகும். மேற்குறித்த விதமாக சிறுதோட்ட உரிமையாளர்களுக்காக நாட்டின் பல்வேறு மாகாணங்களில் பயிற்சி வேலைத்திட்டம் நிகழ்த்த வேண்டியுள்ளது. எனினும் அத்தகைய தூர பிரயாணங்களுக்கு இவ்வாகனங்கள் பொருத்தமானவை அல்ல. அதனால் மிகவும் சிறந்த சேவையை உறுதிபடுத்துவதாயின் இப் பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்களை கொள்வனவு செய்தல் அவசியமாகும்.

மேலும் பிராந்தியங்களில் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், ஓடியோ விசுவல் உபகரணங்கள், முறையாக பொதி செய்யப்பட்டு கொண்டு செல்லப்படாவிடின் அவை சேதப்படுகின்றன. ஆனால் தற்போதுள்ள வாகனங்கள் ஓடியோ விசுவல் கருவிகளை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு பொருத்தமானவையல்ல. இதனால் நடமாடும் பயிற்சி அலகொன்றாக தயார்படுத்துவதற்கு பொருத்தமான வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்படவேண்டிய தேவையுள்ளது.

**9.0 தீர்மானம்.**

பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்தமையால் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வு ஆண்டிற்குள் மகிழ்ச்சிகரமான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை காணமுடிகிறது. குறித்த வருடத்திற்குள் நிகழ்த்த திட்டமிட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 139ஆகும். அதை 249 ஆக அதிகரித்துக் கொள்ள நிறுவனத்திற்கு முடிந்தது. அதை எதிர்பார்த்த நிகழ்ச்சித்திட்டங்களோடு ஒப்பிடும் போது 179.1% ஆன வளர்ச்சி ஆகும். எனினும் முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் நன்மை / குணநல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் போதிய பிரச்சாரம் பெற்றுக் கொடுத்த போதும் அது தொடர்பில் கிடைத்த கேள்வியோ போதியதாக தென்படாமையால் இவ் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் பொருளாதார ரீதியில் நட்டமான ஒன்றாகும். தொழிலாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறுதோட்ட உரிமையாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தொகை 254.1% ஆல்அதிகரித்துக் கொள்ளக் கிடைத்தமை மகிழ்ச்சிதரும் விடயமாகும். இதில் இவ்விரு சாராருக்குமாக மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கூடிய கேள்வி காணப்படுகின்றது என்பது தெளிவாக புலப்படுகின்றது. சிறுதோட்ட உரிமையாளர் மற்றும் தொழிலாளருக்கும் இதைவிட கூடிய அளவில்

நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடிந்த போதும் பயிற்றுவிப்பாளர் பிரிவில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறையால் அவ் இலக்கை அடைய முடியவில்லை.

மீளாய்வு ஆண்டின்போது, பொகவந்தலாவை பயிற்சி நிலையத்தின் ரூபா 1.65 மில் செலவிட்டு சமையலறை, மலசலகூடம் மற்றும் சாப்பாட்டு அறை திருத்தப்பட்டது, பதவியினர் விடுதிகளுக்காக நீர் வழங்கல் சபையிடமிருந்து நீர் வசதி வழங்கப்பட்டதுடன் கொரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சாப்பாட்டு அறையொன்றும் தயார்படுத்தப்பட்டது.

வரவு மற்றும் செலவிற்கு இடையில் 5.231 மில்லியன் பற்றாக்குறை காட்டப்பட்டாலும் புனரமைப்புச் செலவிற்காக திறைசேரி மூலம் கிடைத்த தொகையால் புனரமைப்பு செலவில் 21% வரை ஈடு செய்யமுடிந்தது.

அத்துடன் நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட வருவாயில் 4.865 மில்லியன் ரூபாயை செலவிட்டு தேயிலை, இறப்பர், தெங்கு, கரும்பு மற்றும் மரமுந்திரிகை ஆகிய சிறுதோட்ட உரிமையாளர்களுக்கான 188 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது. திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி அத்தோடு மீளாய்வு ஆண்டிலும் வரலாற்றில் முதற்தடவையாக, மீளாய்வு ஆண்டின்போது கிழக்கு மாகாணத்திலும் சில நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. 2013 இல் நிறுவனத்தின் உள்ளக வீதிகள் மற்றும் அலுவலக கட்டடத்தினை திருத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் படி பார்க்கும் போது மீளாய்வு ஆண்டில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பில் திருப்தி அடையக்கூடியதுடன், ஊழியர் அக்கறை மற்றும் அர்ப்பணிப்புடன் நிர்வாக சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் 2013 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ள முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

2012 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நிறுவனத்தின் தவிசாளர், சபை பணிப்பாளர்கள் மற்றும் முகாமைத்துவம் தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றனர்.

**ரஞ்சித் சமரசிங்க**
**தவிசாளர்.**
**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்.**

# நிதி கூற்றுக்கள்

# 2012

## உள்ளடக்கம்

**விளக்கம்** **பக்க இலக்கம்**


| விளக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| குறிப்பு மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் | 1-9 |
| நிதியியல் நிலைமையின் அறிக்கை | 10 |
| நிதியியல் செயலாற்றுகை அறிக்கை | 11 |
| பங்கில் / தேறிய சொத்துக்களில் மாற்றங்களின் அறிக்கை | 12 |
| நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள் | 13 |
| மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான செயலாற்றுகை | 14 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 15 |
| அறுவச் சொத்துக்கள் | 16 |
| கணக்குகளுக்கான குறிப்புக்கள் | 17-27 |
| 2007 – 2012 வரை செயலாற்றுகை அறிக்கை | 28 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 29-36 |

# தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம்

## 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கணக்கியல் குறிப்பு

### 1) அடிப்படை கணக்கியல் கோட்பாடுகள்

கணக்கீடானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதுடன் அதுவே ஆளுனர் சபையின் கொள்கையாகவும் உள்ளது. தேவையான நிதியானது அரசாங்க மாணிய கொடை மூலமாகவும், மற்றும் பயிற்சி நெறிகளை நடாத்துவதன் மூலமாகவும் பெறப்படுகிறது. கல்விசார் கற்கை நெறிகள், நிபுணத்துவம் சார் ஆலோசனை சேவைகளைப் பொறுப்பேற்றல், நிபுணர்களின் அங்கத்துவ சந்தாப்பணம், மற்றும் நிறுவக வெளியீடுகளின் விற்பனை ஆகிய வருமானங்கள் நிறுவகத்தின் சகல நிதி குறைபாடுகளையும் தேவையேற்படும்போது ஈடு செய்கிறது.

### 2) கணக்கீட்டு கோட்பாட்டு மூலத்தத்துவங்களின் சுருக்கம்

நிதிக்கணக்குகள் தொடர்பான அறிக்கைகளை தயாரிக்கும்போது கீழ்வரும் பிரதானமான கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.. இக்கொள்கைகள், அறிவுறுத்தப்படும் வரை மாற்றிமின்றி சகல வருடங்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன.

### 2.1 அறிக்கைகள் தயாரிப்பதற்கான அடிப்படை

திரண்ட கணக்கீட்டு அடிப்படையில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பிரயோகிக்கப்படுகின்ற அளவுத்திட்ட அடிப்படையானது சொத்துக்களின் மீள்மதிப்பீடுக்காக சீராக்கப்பட்ட வரலாற்று ரீதியான கிரய அடிப்படையாகும்

ஒரு வெற்றிகரமான வணிகத்தொழில் அடிப்படையில் நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பதுடன் கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிட்ட காலத்தில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டன.

### 2.1.1 சேவைகள், வேலைகள் மற்றும் வழங்கல்கள்

கொள்வனவு வழிகாட்டிற்கு இணங்க வேலைகள், சேவைகள் மற்றும் வழங்கல்கள்களை கொள்வனவு செய்ய கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டது.

### 2.1.2 புலப்படாத சொத்துக்கள்

புலப்படாத சொத்துக்களை பயன்படுத்தும்போது அவை தனியாக கிரமமற்ற செலவினமாக தீர்க்கப்படுவதுடன் அவை திரட்டப்படும். செலவினமாக தீர்க்கப்படுபவை நேர்கோட்டு முறையில் உரிய சொத்தின் பயன்பாட்டு ஆயுட்கால அடிப்படையில் பதிவழிக்கப்படும். கணிக்கப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் செலவினமாக தீர்க்கப்பட வேண்டிய தொகை என்பன ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் அமுலாக்கப்பட வேண்டிய யாதேனும் மதிப்பீட்டிற்கான மாற்றங்கள் எதிர்பார்ப்பு அடிப்படையில் கணக்கிடப்படும். புலப்படாத சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலம் பின்வருமாறு,

**அபிவிருத்திச் செலவு தயாரிக்கப்பட்டுள்ள பாட அலகுகள்**

பெருந்தோட்ட முகாமைத்துவ தேசிய டிப்ளோமா பாடநெறியின் அபிவிருத்திச் செலவு புலப்படாத சொத்தாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, தயாரிக்கப்பட்டுள்ள பாட அலகுகளின் (எழுதப்பட்டுள்ள மொடியூல்ஸ்) நான்கு ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன.

## சிறுதோட்ட உடமையாளர்களுக்கு ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுதோட்ட உடமையாளர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவனத்துக்கு ஒரு அருவச் சொத்தாகக் கருதப்படுகின்றது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவனத்தின் நன்மதிப்பை உயர்த்துவதற்கு வழிவகுக்கின்றது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக சிறு தோட்ட உடமையாளர்கள் தமது ஆற்றலை விருத்தி செய்து கொள்வதோடு அறிவையும் வளர்த்துக்கொள்கின்றனர். தொழிற்துறையினதும், நிறுவனத்தினதும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு இவை காரணமாக அமைகின்றன.

சிறுதோட்ட உடமையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறவனத்தின் மூலதன முதலீடொன்றாகக் கருதப்படுகின்றது. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதிபலன்களை நான்கு வருடங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பப்படுகின்றது. அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முதலீட்டின் பெறுமதி முறையாக நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்ட தினங்களிலிருந்து நான்கு வருடங்களில் முறையாக பதிவழிக்கப்படும்.

**கணக்கீடு தொடர்பான கணனிப் பொதி**

| விபரம் | கணனி கணக்கீட்டு மென்பொருள் | தொலைக்கல்வி கற்கைநெறி தயாரித்தல் செலவு | சிறு உடமையையாளர்களுகாகன திறனபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|---|---|
| பயன்படு ஆயுட்காலம் | 4 வருடங்கள் | 4 வருடங்கள் | 4 வருடங்கள் |

### 2.2 பொறித்தொகுதியும் உபகரணங்களும்

பொறித்தொகுதிகளும் உபகரணங்களும் வரலாற்று கிரய அடிப்படையில் திரண்ட பெறுமானத் தேய்வினைக் கழித்த தொகையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுக் கிரயமானது அனைத்து நேரடி கிரயங்கள் குறித்த சொத்தினையும் வேலை செய்யக்கூடிய மற்றும் அவசியமான புதுப்பித்தல்களை மேற்கொள்ளும் செலவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

#### 2.2.1 பெறுமானத்தேய்வு

பெறுமானத் தேய்வானது ஒடுங்கு பாக மீதி முறையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட வீதத்தில் குறித்த சொத்தின் பெறுமதியினை இல்லாது ஒழிப்பதற்காக கணக்கீட்டு நோக்கில் அமுல்படுத்தப்படுகிறது. பெறுமானத் தேய்வானது கொள்வனவு மேற்கொண்ட மாதத்திற்கு கணிப்பிடப்படுவதில்லை.

பெறுமானத்தேய்வு வீதம் பொதுவாக பின்வருமாறு பயன்படுத்தப்படும்.

| | |
|---|---|
| முழு உடைமை கட்டடம் | 5% |
| அலுவலக தளபாடங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 20% |
| மோட்டார் வாகணங்கள் | 20% |
| பொறிகளும் இயந்திரங்களும் | 20% |
| வீதி நீர் விநியோகம்,மின்சாரம் மற்றும் தொலைபேசி | 10% |
| நூலக புத்தகங்கள் | 10% |
| நானாவித உபகரணங்கள் | 25% |
| காணியும் காணி அபிவிருத்தியும் | 10% |

வீதி அபிவிருத்தி, வேலி அமைத்தல் மற்றும் நில அபிவிருத்தி நோக்கோடு மேற்கொள்ளப்படும் செலவுகள் என்பன நிலம் மற்றும் நில அபிவிருத்திச் செலவுப் பெறுமதியில்

உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நில அபிவிருத்திக்காக மேற்கொள்ளபப்டும் செலவின் பயன்படு காலம் 10 வருடங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் தவிர்ந்த அனைத்து நிலையான சொத்துக்கள் கிரய அடிப்படையில் பெறுமானத் தேய்வு இடப்படுகின்றது என்பதுடன் வாகனங்கள் மிள்மதிப்பீட்டு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றன.

### 2.2.2 தள்ளுபடி

சொத்து தள்ளுபடி இலாபம் அல்லது நட்டமானது தள்ளுபடி மூலம் கிடைக்கும் வருமானம் , சொத்தினை பராமரிக்கும் செலவினம் என்பவற்றினை ஒப்பிடுவதன் மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவைகள் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.2.3 மீள் மதிப்பீடு

புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்களைத் தவிர, நிறுவனத்தின் மோட்டார் வாகனங்கள் 2012 ஆகஸ்ட் 23 ஆம் திகதி ஒரு துறைசார் வாகனப் பொறியியலாளரினால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன. மீள் மதிப்பீட்டின் பெறுவனவானது மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களில் சேர்க்கப்பட்டது. அதன் விபரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| மதிப்பீட்டாளரின் பெயர் | - திரு. டீ.பீ.டீ. சில்வா | | |
| தகைமை | - வாகனங்களுக்கான துறைசார் பொறியியலாளர் | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட திகதி | - 2012 ஆகஸ்ட் 23 | | |
| மீள் மதிப்பிடப்பட்ட தொகை | -32-4086 ஜீப் | ரூபாய் | 1,450,000/- |
| | 61-2361 வசு வண்டி | ரூபாய் | 950,000/- |
| | 250-3161 கெப் வண்டி | ரூபாய் | 1,700,000/- |
| | 58-3717 கெப் வண்டி | ரூபாய் | 1,700,000/- |
| | 250-2603 கெப் வண்டி | ரூபாய். | 1,550,000/- |
| | 250-2604 வேன் வண்டி | ரூபாய் | 1,950,000/- |

### 2.2.4 காரியாலய சொத்துக்கள் தளபாடங்கள் மதிப்பீடு

நிறுவனமானது வருடாந்த சொத்துக்கள்/மதிப்பீட்டு ஆய்வை வருட இறுதியில் மேற்கொண்டு பாவனைக்குத் தகுதியற்ற பொருள்களை அகற்றுவதற்குப் பரிந்துரை செய்கின்றது.

## 3.0 உட்கட்டமைப்பு வசதிகளிற்கான வைப்பக்கள்

இது உட்கட்டமைப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களினால் தத்தமது சேவைகளிற்கு எதிராக உறுதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

## 4.0 சரக்கிருப்புக்கள்

நிறுவனத்தின் சரக்கிருப்பானது நிறுவன வெளியீடுகள், அச்சிடும் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள், டயர்கள் , நாளாந்த பாவனைக்கருவிகள் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. அவைகள் சரக்கு கொள்விலையில் முதல் வந்தது முதல் வெளி என்ற கிரய கணிப்பீட்டு முறையில் மதிப்பிடப்பட்டுள்ளது. காகிதாதிகள் நிறுவன உள்ளக சேவைகளிற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய வெளியீடுகளிற்கான சரக்கிருப்புகளில் நன்கொடையாக வழங்குவதற்காக தேயிலை அபிவிருத்தி அதிகார சபையில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 5.0 பணமும் பணத்திற்கான கிட்டிய பதிலீடும்

கையிலுள்ள பணமானது பணத்தையும் பணத்திற்கான கிட்டிய பதிலீடுகளையும் உள்ளடக்கியுள்ளது. மற்றும் நடைமுறைகணக்கு மீதியானது இலங்கை வங்கியின் அத்துறுகிரிய கிளை பராமரிக்கப்படுகின்றது.

## 6.0 குறுங்கால முதலீடுகள்

நிறுவனமானது குறுங்கால வைப்புக்களை மேலதிக வருமானம் உருவாக்கும் நோக்கோடு வைப்பிட்டுள்ளதுடன், நிலையான வைப்புக்கள் மற்றும் அங்கத்தவர்களின் சேமிப்புக் கணக்கு மீதிகளை இலங்கை வங்கி அத்துருகிரிய கிளையில் நிறுவனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தும் நோக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

## 7.0 ஒதுக்கங்கள்

### 7.1 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

2012 ம் ஆண்டின் வாகன மீள் மதிப்பீட்டு இலாபமானது ஒதுக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாகன தள்ளுபடி இலாபமானது பகிரப்படாத இலாபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## 8.0 தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய கொடைகள்

ஊழியர் பணிக்கொடையானது நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் ஒதுக்கப்படுவதுடன் அத்தொகை நிறுவன ஊழியர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்குவதற்காக கணக்கில் பேணப்பட்டு வருகின்றது. செலுத்த வேண்டிய தொகை நடைமுறை பொறுப்புக்களையும் உள்ளடக்கி ஒருவருடம் வீழ்ச்சியடைந்துள்ளது.

## 9.0 பிற்போடப்பட்ட வருமானங்கள்

### 9.1 நன்கொடை புத்தக இருப்புகள்

தேயிலை அபிவிருத்தி கருத்திட்டத்தின் நன்கொடை புத்தக இருப்புகள் பற்றிய செலவுகள் பிற்போடப்பட்ட வருமானங்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. வருமானமானது அவை அனுமதிக்கப்பட்டதும் கணக்குளில் பதிவு செய்யப்படும்.

### 9.2 மூலதன செலவினங்களிற்கான அரசாங்க மாணியங்கள

தேசிய பாதீட்டு திணைக்களமானது முக்கியமான ஒதுக்கீட்டு தொகையாக மூலதன அபிவிருத்தி செலவினங்களிற்காக மாணியங்களை அனுமதித்து உள்ளதுடன் அவை பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டு அது முறைப்படுத்தப்பட்டு. சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முழு உடைமை கட்டடங்கள் | 20 வருடங்கள் |
| அலுவலக தளபாடங்கள் | 10 வருடங்கள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 வருடங்கள் |
| மோட்டார் வாகணங்கள் | 5 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 05வருடங்கள் |
| வீதி நீர் விநியோகம், மின்சாரம் மற்றும் தொலைபேசி | 10 வருடங்கள் |
| நூலக புத்தகங்கள் | 10 வருடங்கள் |
| நானாவித உபகரணங்கள் | 4 வருடங்கள் |
| நிலமும் நில விருத்தியும் | 10 வருடங்கள் |

## 10.0 குறுங்கால ஒதுக்கீடுகளும் தீடிர் ஏற்பாடுகளும்

### 10.1 தற்செயல் மாற்றீட்டிற்கான பொறுப்பு

காட்சி கேள்வி அலுவலராக கடமையாற்றிய திரு. ஏ.கே.சீ. அத்தனகொட அவர்கள் ஒழுங்கீனத்தின் காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்டதனால் குறித்த கணக்கீட்டு காலப்பகுதியில் தீடிர் மொத்தப் பொறுப்பு ரூபா: 508,071/- ஏற்பட்டது. இது கணக்கீட்டு

காலறையறை முடிவடையும் வரை ஆளுனர் சபையின் முடிவுக்காக காத்திருக்கின்றது. வருட இறுதியில் நிலையற்ற பொறுப்பு 1,873,620.60. ரூபாய் ஆகும்.

### 11.0 பயிற்சி நெறிமூல வருமானம்

### 11.1 குறுங்கால நிகழ்ச்சித்திட்டம்

குறித்த பாட நெறியானது ஆறு மாதகாலத்திற்கும் குறைவான காலப்பகுதியைக் கொண்டிருக்குமாயின் அது குறுங்கால பயிற்சி நெறியாக கருதப்படும். குறுங்கால பயிற்சி நெறி மூலமான மொத்த வருமானமானது வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் அவை குறித்த நிதியாண்டில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நெறிகளாகும்.

### 11.2 நீண்டகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்)

குறித்த பயிற்சி நெறியானது ஆறு மாதத்திற்கும் மேலதிகமான காலப்பகுதியைக் கொண்டிருக்குமாயின் அது நீண்ட கால நிகழ்சசித்திட்டமாக கருதப்படுகின்றது. (நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்) . இப்பயிற்சி நெறிகளின் வருமானமானது, பயிற்சி நெறியின் காலவரையறை மற்றும் ஆரம்பிக்கப்பட்ட மாதத்தினை கருத்திற் கொண்டு, நிதிச்செயலாற்றுகை அறிக்கை வருமான அறிக்கையில் விகிதாசார அடிப்படையில் அங்கிகரிக்கப்படும்.

## 12.0 பொகவந்தலாவ பிராந்திய நிலையம்

பகவந்தலாவ பிராந்திய நிலையம் தொடர்பான வருமானம் மற்றும் செலவினங்கள் நிதியியல் பிராந்திய அறிக்கையில் தனியாக அறிக்கையிடப்படுகின்றன

## 13.0 கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றங்கள்

2012 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை குறைந்து செல்லும் நிலுவை முறையிலிருந்து நேர்கோட்டு முறைமைக்கு பெறுமானத் தேய்வின் கணக்கீட்டுக் கொள்கையை தன்னிச்சையாக மாற்றியமைத்திருக்கின்றது.

சீராக்கல் தொகையின் நடைமுறைக்கு ஒவ்வாத தன்மை காரணமாக சீராக்கப்பட்ட தொகையின் விளைவை நிறுவனத்தால் தீர்மானிக்கப்பட முடியாதுள்ளது. 2011 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான சொத்துக்களின் நடைமுறைப் பெறுமதியை சொத்துக்களின் கிரயமாக நிறுவனம் அங்கீகரிக்கின்றது. சொத்துக்களின் ஆயுட்காலப் பயன்பாட்டின் மாற்றத்துக்கு ஏற்ப புதிய திருத்தப்பட்ட வீதவரிகளை கருத்தில் கொண்டு பெறுமானத் தேய்வைக் கணிப்பிடுவதற்கு புதிய பெறுமானத் தேய்வு முறைமை (நேர் கோட்டு) பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தரநியமத்தின் தேவைகளுக்கு ஏற்ப பின்வரும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- பெறுமானத் தேய்வு முறையானது குறைந்து செல்லும் நிலுவை முறையிலிருந்து நேர்கோட்டு முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளது. பொருத்தமான தேய்வின் திருத்தப்பட்ட வீதவரிகள் கீழ் குறிப்பிட்டவாறு இருக்கும்.

| **சொத்துக்களின் தன்மை** | **இருக்கும். (1/1/2012 முன்னர்)** | **திருத்திய வீதம் ( 1/1/2012 பின்னர்)** | **1/1/2012 இல் உள்ளவாறான சொத்துக்களின் கிரயம்** |
|---|---|---|---|
| இலவசமாக வைத்திருக்கின்ற கட்டடங்கள் | 5% | 5% | 41,961,425.87 |
| அலுவலக தளபாடம் | 10% | 10% | 2,089,843.75 |
| அலுவலக உபகரணம் | 10% | 20% | 8,524,946.39 |
| மோட்டார் வாகனங்கள் | 20% | 20% | 17,233,806.22 |
| பொறித்தொகுதியும் இயந்திராதிகளும் | 10% | 20% | 504,113.04 |
| பாதை, நீர் விநியோகம், மின்சாரம் மற்றும் தொலைபேசி | 10% | 10% | 230,025.78 |
| நூல் நிலையப் புத்தகம் | 10% | 10% | 667,195.68 |
| நாணாவித உபகரணங்கள் | 20% | 25% | 2,110,494.17 |
| காணி மற்றும் காணி மேம்படுத்தல்கள் | 20% | 10% | 3,090,722.94 |
| மொத்தம் | | | **76,412,573.84** |

- பெறுமானத்தேய்வு முறைமையின் மாற்றமானது அதன் ஆயுட்காலப் பயன்பாட்டின் சரியானதும், நம்பகமானதுமான தகவல்களைக் கணிப்பதற்கு உதவியாக இருக்கும்.

- தற்போதைய காலங்களோடு ஒப்பீட்டை அடைந்து கொள்வதற்கு அதிக முன்னைய காலத்துக்கான ஒப்பீட்டுத் தகவல்களை சீராக்குவது நடைமுறைக்கு ஒவ்வாததாகும். எனவே, தகவலை மீள உருவாக்குவதற்கு ஒரு முன்னைய காலத்தை சீராக்குவதற்கு பின்னோக்கிய மீள் அறிக்கை நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

- இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்பவே கணக்கீட்டு வடிவமைப்புக்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.

## கணக்கீட்டு உத்தேச மதிப்பீடு மற்றும் தவறுகளில் மாற்றங்கள்

பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்படுகின்ற மூலதன நன்கொடைக்கு திறைசேரியினால் நிதியிடப்படுகின்ற சொத்துக்களின் ஆயுட்காலப் பயன்பாட்டைப் பிரயோகித்து ஒரு முறையான அடிப்படையில் நிதியியயல் செயலாற்றுகை அறிக்கைக்குப் பதில் அளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட நன்கொடைகளை தரநியமங்களுக்கு ஏற்ப கணக்கிடப்படவில்லை. எனவே நிதியியல் அறிக்கைகளுக்கான குறிப்பிடத்தக்க தகவல்களை வழங்கி பங்கு/தேறிய சொத்தக்களின் மாற்றங்களின் அறிக்கையை நிறுவனமானது மீளக் குறிப்பிட்டுள்ளது.

அதே நேரம், பழைய வாகனத்தை விற்றுத் தீரப்பதன் மூலம் 2011 ஆம் ஆண்டில் திறைசேரிக்கு (ரூபாய் 1,231,776/-) நிதி மாற்றம் செய்யப்பட்டதானது பிற்போடப்பட்ட தொகையை குறைக்கின்றதோடு பிற்போடப்பட்ட வருமானக் கணக்கில் பின்வரும் மாற்றங்களுக்குக் காரணமாக இருந்தது.

- அறுவச்சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் (மதிப்பிடப்பட்டது) பின்வருமாறு

| வருடம் | கணக்கு நிலுவை (ரூபாய்) |
|---|---|
| 2010 டிசம்பர் 31 | 53,758,605.20 |
| 2011 டிசம்பர் 31 | 67,702,665.31 |
| 2012 டிசம்பர் 31 | 65,286,876.23 |

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**
**நிதியயல் நிலைக் கூற்று**
**டிசம்பர் 31 அன்று உள்ளவாறு**

| | குறிப்புக்கள் | 31/12/2012 | மீள்குறிப்பிடப்பட்டது 31/12/2011 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 1 | 886,669.70 | 5,034,095.79 |
| கிடைக்கப்பெறத்தக்கவை | 2 | 5,081,305.49 | 3,637,661.62 |
| பொருட்பதிவேடு | 3 | 884,003.26 | 863,355.90 |
| முற்கொடுப்பனவு | 4 | 447,623.63 | 466,013.40 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 5 | 7,690,524.44 | 15,153,249.96 |
| | | **14,990,126.52** | **25,154,376.67** |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| கிடைக்கப்பெறத்தக்கவை | 6 | 1,437,876.97 | 989,006.62 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 7 | 78,218,981.27 | 76,412,573.84 |
| அசையும் சொத்துக்கள் | 8 | 4,880,022.72 | 480,937.50 |
| ஏனைய நிதியற்ற சொத்துக்கள் | 9 | 391,975.00 | 391,975.00 |
| | | **84,928,855.96** | 78,274,492.96 |
| **மொத்த சொத்துக்கள்** | | **9,918,982.48** | **103,428,869.63** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தப்படத்தக்கவை | 10 | 6,628,276.59 | 11,849,233.77 |
| குறுகியகால ஏற்பாடுகள் | 11 | 1,901,176.60 | 1,395,749.60 |
| ஊழியர் நலன்கள் | 12 | 1,118,662.87 | |
| | | **9,648,116.06** | **13,244,983.37** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| நீண்டகால ஏற்பாடுகள் | 13 | 65,286,876.23 | 67,702,665.31 |
| ஊழியர் நலன்கள் | 14 | 5,323,288.83 | 5,481,132.76 |
| | | **70,610,165.06** | **73,183,798.07** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **80,258,281.12** | **86,428,781.44** |
| **தேறிய சொத்துக்கள்** | | **19,660,701.36** | **17,000,088.19** |
| **தேறிய சொத்துக்கள்/ ஒப்புரவு** | | | |
| அரசாங்கம் மற்றும் ஏனைய அரசாங்க குழுமங்களினால் பங்களிப்புச் செய்யப்பட் மூலதனம் | 15 | 8,386,495.21 | 38,386,495.21 |
| ஒதுக்குகள் | 16 | 7,833,012.66 | 2,751,220.37 |
| ஒன்று திரட்டிய மிகை/பற்றாக்குறை | 17 | (26,558,806.51) | (24,137,627.39) |
| **மொத்த தேறிய சொத்துக்கள்/ ஒப்புரவு** | | **19,660,701.36** | **17,000,088.19** |

பக்கம் 1-9 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் இந்நிதியியல் கூற்றுகளின் முக்கிய பகுதி ஒன்றாகும்

பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் தேவைப்பாடுகளுக்கமைய இக்கணக்ககள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துகின்றோம்

எல்.டி.ஜே.பிரியந்த
கணக்காளர்
28/02/2013

பி.டப்.ஏ.கபிலவன்ஷ
பணிப்பாளர்

ஆர்.கே.சமரசிங்க
தவிசாளர்

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

**நிதியியல் செயலாற்றுகைக் கூற்று**

டிசம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டுக்கானது

| **வருமானம்** | குறிப்பு | 31/12/2012<br>ரூபாய் | மீள்குறிப்பிடப்பட்டது<br>31/12/2011<br>ரூபாய் |
|---|---|---|---|
| அரசாங்க மீண்டெழும் அளிப்புகள் | 18 | 8,480,000.00 | 8,500,000.00 |
| பிற்போடப்பட்ட அரசாங்க மூலதன அளிப்பிலிருந்து வருமானம் | 19 | 9,415,789.08 | 3,934,163.89 |
| பயிற்சி வருமானம் | 20 | 13,731,102.43 | 9,647,640.08 |
| வதிவிட வசதிகளை வாடகைக்கு விடல் | 21 | 7,559,446.08 | 7,951,989.00 |
| பொகவந்தலாவ பிராந்திய நிலைய வருமானம் | 22 | 3,796,837.61 | 3,970,322.00 |
| வட்டி வருமானம் | 23 | 693,453.12 | 1,089,295.60 |
| ஏனைய வருமானம் | 24 | 680,663.87 | 1,705,182.78 |
| மொத்த வருவாய் | | 44,357,292.19 | 36,798,593.35 |
| | | | |
| செலவுகள் | | | |
| கூலிகள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் | 25 | 17,684,100.54 | 15,357,852.70 |
| வழங்களும் பயன்படுத்தப்பட்ட நுகரத்தக்கவையும் | 26 | 2,732,505.07 | 2,527,551.83 |
| திருத்தல்களும் பராமரிப்பும் | 27 | 2,128,001.46 | 1,928,534.65 |
| தொடர்பாடல், பொதுப் பயன்பாடுகள் | 28 | 5,289,807.69 | 4,264,438.89 |
| பயிற்சிச் செலவுகள் | 29 | 6,425,816.69 | 6,138,065.30 |
| வசதிகளை வாடகைக்கு விடுவதுடன் தொடர்புடைய செலவுகள் | 30 | 2,561,533.42 | 1,033,088.72 |
| பொகவந்தலாவ பிராந்திய நிலைய செலவுகள் | 31 | 2,037,215.78 | 2,162,615.00 |
| பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதிக்கழிவுச் செலவுகள் | 32 | 9,725,102.81 | 3,946,538.89 |
| ஏனைய செலவுகள் | 33 | 945,608.22 | 687,778.13 |
| மொத்த செலவுகள் | | 49,529,691.68 | 38,046,464.11 |
| காலத்திற்கான மிகை/பற்றாக்குறை | | (5,172,399.49) | (1,247,870.76) |
| கட்டுப்படுத்தும் குழும உரிமையாளர்களுக்கு சாட்டத்தக்கது | | (5,172,399.49) | (1,247,870.76) |

| தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்<br>தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு மாற்றக் கூற்று<br>2012 டிசம்பர் 31 முடிவுற்ற ஆண்டுக்கானது | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒப்புரவு மாற்ற கூற்று | | | | | **மொத்த தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு** |
| விபரம் | பங்களிக்கப்பட்ட மூலதனம் | மீள்பெறுமதி மதிப்பீட்டு ஒதுக்கு | ஒன்று திரட்டிய மிகை/(பற்றாக்குறை | மொத்தம் | |
| 2009.12.31 அன்று மீதி | 142,493,073.11 | 3,155,940.28 | (81,754,688.72) | 63,894,324.67 | 63,894,324.67 |
| மீள்குறிப்பிடப்பட்டவாறு 2010 டிசம்பர் 31 அன்று பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றம் | (104,106,577.90) | | | (104,106,577.90) | (104,106,577.90) |
| மீள்குறிப்பிடப்பட்டவாறு 2010 டிசம்பர் 31 (2010.01.01 இற்கு முன்னர் மூலதன அளிப்பு) அன்று பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றம் | | | 53,679,477.26 | 53,679,477.26 | 53,679,477.26 |
| மீள்குறிப்பிடப்பட்டவாறு 2010 டிசம்பர் 31 அன்று (2010 மூலதன அளிப்பு பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றம் | | | 3,269,432.89 | 3,269,432.89 | 3,269,432.89 |
| 2010 இற்கான மிகை | | | 1,511,302.03 | 1,511,302.03 | 1,511,302.03 |
| 2010 டிசம்பர் 31 அன்று மீதி | **38,386,495.21** | **3,155,940.28** | **(23,294,476.54)** | **18,247,958.95** | **18,247,958.95** |
| மீள்குறிப்பிடப்பட்டவாறு 2010 டிசம்பர் 31 அன்று (2011 மூலதன அளிப்பு பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றம் | | | 3,113,837.37 | 3,113,837.37 | 3,113,837.37 |
| திரட்டிய நிதியத்திற்கு மாற்றம் - 2011 | (1,231,776.00) | | | (1,231,776.00) | (1,231,776.00) |
| மீள்குறிப்பிட்டவாறு 2011.12.31 அன்று பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றம் | 1,231,776.00 | | | 1,231,776.00 | 1,231,776.00 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பிற்கு மீள்பெறுமதி மதிப்பீடு மாற்றம் | | (404,719.91) | 404,719.91 | - | - |
| 2011ம் ஆண்டிற்கான மிகை /(பற்றாக்குறை) | | | (4,361,708.13) | (4,361,708.13) | (4,361,708.13) |
| 2011 டிசம்பர் 31 அன்று மீதி | **38,386,495.21** | **2,751,220.37** | **(24,137,627.39)** | **17,000,088.19** | **17,000,088.19** |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பிற்கு மீள்பெறுமதி மதிப்பீடு ஒதுக்கு மாற்றம் | | (2,751,220.37) | 2,751,220.37 | - | - |
| சொத்தக்களின் மீள்பெறுமதி மதிப்பீட்டு மீதான பெறுகை | | 7,833,012.66 | | 7,833,012.66 | 7,833,012.66 |
| 2012ம் ஆண்டிற்கான மிகை /(பற்றாக்குறை) | | | (5,172,399.49) | (5,172,399.49) | (5,172,399.49) |
| 2012 டிசம்பர் 31 அன்று மீதி | **38,386,495.21** | **7,833,012.66** | **(26,558,806.51)** | **19,660,701.36** | **19,660,701.36** |
| | | | | | |

| தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்<br>காசுப்பாய்ச்சல் கூற்று | | |
|---|---|---|
| முடிவுற்ற ஆண்டுக்கானது | | |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | 31/12/2012 | மீள்குறிப்பிடப்பட்டவை31/12/2011 |
| - | ரூபா | ரூபா |
| ஆண்டுக்கான மிகை (பற்றாக்குறை) | (5,172,399.49) | (4,361,708.13) |
| காசற்ற அசைவுகள் | | |
| தேய்மானம் (குறிப்பு 2) | 9,025,714.49 | 3,934,163.89 |
| பெறுமதிக் குறைப்பு | 699,388.32 | 12,375.00 |
| ஓய்வுப் பணிக்கொடைக்கான ஏற்பாடு | 960,818.94 | 602,823.21 |
| நிரந்தரச் சொத்துக்கள் விற்பனை மீதான இலாபம் | (64,112.51) | (1,192,926.93) |
| பிற்போடப்பட்ட வருமானம் | (9,415,789.08) | (820,326.52) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (1,443,643.87) | 1,140,390.18 |
| பொருட்பதிவேடுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (20,647.36) | (12,013.08) |
| முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 18,389.77 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் (அதிகரிப்பு)/ குறைவு | 7,462,725.52 | 5,351,194.35 |
| நீண்ட கால கிடைக்கப்பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (448,870.35) | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்படத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (5,220,957.18) | 4,986,722.43 |
| குறுகிய கால ஏற்பாடுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 505,427.00 | 468,903.60 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | (3,113,955.80) | 10,109,598.00 |
| முதலீட்டுச் செயற்பாடுகள் | | |
